Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

33 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 33 | பாலம்: 12 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 15, 2023

# கனடிய வங்கி மீண்டும் வட்டி வீதத்தை உயர்த்தியது

கனடிய வங்கி தனது அடிப்படை வட்டி வீதத்தை (Benchmark interest rate) 4.75%ஆக 2023 ஜுன் 07ஆம் திகதி உயர்த்தியது. 2023 ஜனவரியில் அடிப் படை வட்டி வீதத்தை 4.50%ஆக உயர்த்திய பின்னர் கடந்த நான்கு மாதமாக அதில் எந்த மாற்றத்தையும் செய்யாமல் கனடிய வங்கி இருந்தது. தற்போது அடிப்படை வட்டி வீதத்தை 0.25%ஆல் அதிகரித்துள்ளது. வங்கிகளின் கடன் வாங்குவதற்கான வட்டி வீதத்தை நிர்ணயிக்கும் கொள்கைகளை கனடிய வங்கியின் இந்த அடிப்படை வட்டி வீதமே தீர்மானிக்கிறது. கனடாவில் 2001 மே மாதத்திற்குப் பின்னர் அதிகூடியதாகக் கனடிய வங்கியின் தற்போதைய அடிப் படை வட்டி வீதமான 4.75% இருக்கிறது.

2020 மார்ச் மாதத்தில் கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப் பரவலால் உருவான பொருளாதார நிலவரத்தைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரும் முயற்சியாகக் கனடிய வங்கி தனது அடிப்படை வட்டிவீதத்தை 0.25%ஆகக் குறைத்தது. அத்துடன் அக்காலப்பகுதியில் மத்திய அரசு செய்த பெரும் செலவினங்களுக்காக நிதியை உருவாக்கப் பொருளாதார நிபுணர்களால் சர்ச்சைக்குரிய நிகழ்வாகக் கருதப்படும் பெருமளவு பணத்தை அச்சடிக்கும் முயற்சியையும் அது மேற்கொண்டது. பண விநியோகத்தின் திடீர் அதிகரிப்பாலும், உக்ரைன் மீதான ரஷியப் படையெடுப்பு 2022 பெப்ரவரியில் ஆரம்பித்ததாலும் கனடாவில் பணவீக்கம் 4.8%இற்கு உயர் வடைந்தது. கனடாவில் அப்போது இது கடந்த 30 வருட காலத்தில் ஏற்பட்ட அதி உயர் பணவீக்க நிலையாக இருந்தது.

உக்ரைன் ரஷியப் போரால் பணவீக்க நிலை இன்னும் மோசமடையும் எனக்கூறி கனடிய வங்கி 2022 மார்ச் மாதத்தில் தனது அடிப்படை வட்டி வீதத்தை 0.25% ஆல் அதிகரித்து 0.50% ஆக்கியது. இதுவே கனடிய வங்கி இதற்கு முந்தைய மூன்று வருட காலத்தில் முதற் தடவையாகத் தனது அடிப்படை வட்டி வீதத்தை உயர்த்தியது ஆகும்.

2022 மார்ச்சில் தனது அடிப்படை வட்டி வீதத்தை 0.50%இற்கு உயர்த்திய கனடிய வங்கி அதன் பின்னர் தொடர்ந்து 7 முறை படிப்படியாக தனது அடிப்படை வட்டி வீதத்தை உயர்த்திக் கொண்டு வந்தது. இறுதியாக 2023 ஜனவரி 23இல் கனடிய வங்கி தனது அடிப்படை வட்டி வீதத்தை 0.25%ஆல் அதிகரித்து 4.50%இற்கு உயர்த்தியிருந்தது. கனடிய வங்கியின் குறிக்கோள் கனடாவின் பணவீக்கத்தை 2%இற்கு அண்மையில் வைத்திருப்பதாகும்.



Bank of Canada Governor Tiff Macklem

2022 ஆரம்பத்தில் 4.8%ஆக இருந்த பண வீக்கம் 2022 கோடைக்காலத்தில் 8.1% உச்சநிலையை அடைந்தது. இதுவே கனடிய வங்கியின் அடிப்படை வட்டி வீதத்தின் தொடர் அதிகரிப்பிற்குக் காரண மாக இருந்தது. இப்பணவீக்கம் 2023 ஜனவரியில் 5.9%இற்குக் குறைவடைந்தது. அப்போது கனடிய வங்கி 2023 வருட முடிவில் கனடாவில் பணவீக்கம் 3% அளவில் வந்துவிடும் என எதிர்பார்த் திருந்தது. இதனால் 2023 ஜனவரியில் கனடிய வங்கி தனது அடிப்படை வட்டிவீத அதிகரிப்பை 4.50%ஆக அதிகரிக்கும் போது தனது அடிப்படை வட்டிவீதம் அதிகரிப்பதைத் தற்காலிகமாக இத்துடன் நிறுத்தப் போவதாகக் கூறியிருந்தது.

அப்போது ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் கனடிய வங்கியின் ஆளுநர் Tiff Macklem இது ஒரு தற்காலிக நிறுத்தம் என்று கூறியிருந்தார். "2023 ஜனவரியில் ஏற்பட்ட அடிப்படை வட்டிவீத அதிகரிப்புடன் இதுவரை கனடிய வங்கி எடுத்துள்ள முயற்சிகளையும் ஒப்பிடும்போது இவ்வாறான வட்டி வீத அதிகரிப்பைக் கனடிய வங்கி தற்காலிக மாக நிறுத்தலாம் என எதிர்பார்க்கிறோம்" என்று Tiff Macklem கூறியிருந்தார். அவர் மேலும் கூறுகையில் "நீங்கள் இதில் தெளிவாக இருக்கவேண்டும். இது ஒரு நிபந்தனையுடன் கூடிய தற்காலிக நிறுத்தம். இது பொருளாதாரம் எமது கணிப்பில் பரந்த அளவில் உருவாகும் என்ற நம்பிக்கையில் மேற்கொள்ளப்படு கிறது. கனடியப் பணவீக்கம் 2% இலக்கை அடையவைக்க நாம் இன்னும் அடிப்படை வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டியிருந்தால் நாம் அதிகரிக்கத் தயங்கமாட்டோம்" என்றார்.

தொடர்ந்து ஒன்பது மாதங்களாகக் குறைவடைந்து வந்த கனடியப் பணவீக்கம் 2023 மார்ச் மாதத்தில் 4.3%இற்கு வந்திருந்தது. ஆனால் 2023 ஏப்ரலில் கனடாவின் பணவீக்கம் 0.1%ஆல் அதிகரித்து 4.4%இற்கு உயர்ந்தது. அதாவது 2022 யூன் மாதத்தில் கனடாவின் 40 வருட காலத்தில் அதிஉயர் பணவீக்க நிலையான 8.1%ஐ அடைந்த பணவீக்கம் படிப்படியாகக் குறைந்துவந்து 2023 ஏப்ரலில் மீண்டும் உயர்வடையத் தொடங்கியது.

அந்நியச் செலவாணி (Foreign Exchange) நிறுவனமான Monex Canadaஇன் சந்தை ஆய்வாளர் (Market analyst) Jay Zhao-Murray, CBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில் பல காரணிகள் நாட்டின் பணவீக்கத்தை உயர்த்துகின்றன. கனடிய வங்கி சிறந்த முயற்சிகளை எடுத்தபோதும் உணவு முதல் போக்குவரத்து மற்றும் தங்குமிடம் வரை அனைத்துத் தேவைகளுக்குமான விலை தொடர்ந்து அதிகரித்து வருவது பணவீக்கத்திற்குக் குறிப்பிடத்தக்க காரணம் என்றார்.

தொடர்ச்சி 07 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate • Insurance

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
TRUTH BUILDS TRUST

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc.

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact: 647-290-1022 | 0605bala@gmail.com | visit: www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* Independently owned and operated.
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com


# SRI LANKA CALLING














MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136



# For All Your Private Mortgage Needs

## 8T Capital

Mortgage Administration # 13073



**AYNGKARAN SIVA**
Business Development Manager
Mobile: (647) 670-0320
ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital



**JUTHIS KUPER**
Broker Relations Associate
Mobile: (647) 670-2078
juthis@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***



Available Till Midnight
Including Weekends & Holidays

## ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# “வாயை மூடு” என்பது துப்பாக்கி நீட்டுவதைவிட மோசமான செயலா?




தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரை “வாயை மூடு” என்று கூறியதாகத் தெரிவித்து அது மிக மோசமான செயல் என அரசாங்கத் தரப்பில் குற்றம் சுமத்தப்படுகின்றது. அதற்காகவே அவர் கைது செய்யப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் மருதங்கேணியில் வைத்து சிவில் உடையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கஜேந்திரகுமாரை நோக்கி துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியதுடன் தாக்கியதாகவும் கஜேந்திரகுமார் தரப்பில் கூறப்பட்டது. சம்பவத்தின்போது அவர்களில் ஒருவர் தப்பியோட மற்றவர் பிடிக்கப்பட்டார்.

பிடிபட்டவர் தாங்கள் பொலிஸ் எனத் தெரிவித்தார். ஆனால், அவர் சீருடை அணிந்திருக்கவில்லை. பின்னர் அவர்கள் புலனாய்வு உறுப்பினர்கள் என தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

எவ்வாறாயினும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நோக்கி துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்துவது கடுமையான குற்றச் செயல். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட புலனாய்வு உறுப்பினர்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், கஜேந்திரகுமாரே குற்றவாளியாகப் பார்க்கப்பட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்குக் கொண்டுவரப்பட்டு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டிருந்தாலும் பொலிஸாரை “வாயை மூடு” என்று கூறியமைக்காக அவரே ஒரு குற்றவாளியாக அரச தரப்பினரால் குற்றம் சுமத்தப்படுகின்றார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், கஜேந்திரகுமார் எம்.பி ஒரு கௌரவ உறுப்பினராக நடந்து கொள்ளவில்லை. பொலிஸ் அதிகாரிகளை “வாயை மூடு” என தரக் குறைவாக பேசியுள்ளார் என நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம். “சிவில் உடையில் வந்தவர்கள் பொலிஸ் என குறிப்பிட்டார்கள். நான் அதற்கான அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டேன். ஆனால் அவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தவில்லை. பொலிஸ் என்று குறிப்பிட்டுக் கொண்டு சிவிலுடையில் படுகொலையில் ஈடுபட்ட சம்பவங்கள் நாட்டில் பல உள்ளன” என்று கூறினார்.

இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், “அந்தக் காணியின் வேலிக்குப் பின்னால் இருந்த பொலிஸ் அதிகாரியிடம் நீங்கள் முறையற்ற வகையில் கதைத்துள்ளீர்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா?” எனக் கேட்டார். இதற்குப் பதிலளித்த கஜேந்திர குமார் சீருடையில் ஆயுதமேந்திய நிலையில் இருந்த பொலிஸ் அதிகாரியுடன் தான் அப்படிப் பேசவில்லை என்றார்.

தொடர்ந்து கூறிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸாரை “வாயை மூடு” எனக் கூறும் உரிமை எவருக்கும் கிடையாது. நாடாளுமன்ற உறுப்பினர் அல்ல எவர் கூறினாலும் நான் சகித்துக்கொண்டிருக்க மாட்டேன். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. விடயத்தில் பொலிஸாரின் பக்கம் எந்தத் தவறும் கிடையாது என்று தெரிவித்தார்.

தன்னை துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்திய ஆத்திரத்தில் “வாயை மூடு” என்ற வார்த்தையை கஜேந்திரகுமார் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தியதை விட இந்த வார்த்தைப் பிரயோகம் மோசமானதா?

நாட்டின் உயர்சபையாகக் கருத்தப்படும் நாடாளுமன்றத்திலேயே மோசமான வார்த்தைப் பிரயோகங்களை எதிரெதிர் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இப்போது ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்ரமசிங்கவை படு தூஷண வார்த்தையால் திட்டியதை யாரும் மறந்திருக்க முடியாது. இதற்காக வாசுதேவ நாணயக்கார மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



பொலிஸாரோ, புலனாய்வாளர்களோ பொது மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாதவர்களல்ல. குற்றச் செயல்களில் ஈடுபடாதவர்களுமல்ல என்பதை அரசாங்கத் தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும். இன்று நாட்டை அச்சுறுத்தும் போதைப்பொருள் கடத்தல், விற்பனை போன்ற குற்றச் செயல்களில் பொலிஸார் ஈடுபட்டு பிடிபட்டமை தொடர்பான செய்திகளை அடிக்கடி ஊடங்களில் காண்கின்றோம்.

குறிப்பாக, நாட்டின் பாதுகாப்பிற்கு இன்றியமையாதவர்களாகக் கருதப்படுகின்ற புலனாய்வாளர்கள் தமிழ் பிரதேசங்களில் பல அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் யாழ். குடாநாட்டில் படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிக்குமாறு பொதுமக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தனர். அப்போது, இலக்கத் தகடற்ற போட்டார் சைக்கிளில் வரும் நபர்கள் புலிக் கொடியைக் காட்டிச் சென்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. குறித்த போராட்டங்கள் விடுதலைப்புலி ஆதரவாளர்களால் நடத்தப்படுவதாகக் காட்டுவதற்காக அவர்கள் அவ்வாறு செய்தனர்.

இவ்வாறு வரும் நபர்கள் சிலர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்படும் வேளையில், அவர்கள் புலனாய்வாளர்கள் என்பது தெரியவந்தது. இவ்வாறான சம்பவங்களை புலனாய்வு நடவடிக்கை என்று எவ்வாறு கூறுவது? அவை அப்பட்டமான அச்சுறுத்தலும், அடாவடித்தனங்களுமே.

போர் முடிவிற்கு வந்த பின்னரான காலகட்டத்தில் புலனாய்வுப் பிரிவினராலும், புலனாய்வாளர்களின் முகவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களை விபரிக்க முடியாது. தடுப்பு முகாம்களிலிருந்த முன்னாள் போராளிகளின் வீடுகளுக்குச் சென்று விசாரணை என்ற போர்வையில் அங்குள்ள பெண்கள் துன்புறுத்தப்பட்ட சம்பவங்கள் ஏராளம்.

தென்னிலங்கையில் தற்போதும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் நடந்து வருகின்ற போதும், அதனை அடக்கப் பல்வேறு நடவடிக்கைகள் சட்டத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. போராட்டக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் குடும்பத்தினரை யாரும் துன்புறுத்துவதில்லை. தமிழர் என்பதால் அவர்கள் மீது துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களுக்குப் புலிச்சாயம் பூசப்படுகின்றது.

இவ்வாறான நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் மீது துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறலாம். அச்சுறுத்தல் மேற்கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், “வாயை மூடு” என்று கூறியமைக்காகவே இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# எந்தத் தேர்தல் முதலில் நடைபெறும்?

- விகிர்தன் -

தேர்தல் தொடர்பான பல்வேறு செய்திகள், ஊகங்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலா- மாகாண சபைத் தேர்தலா - அல்லது ஜனாதிபதி தேர்தலா முதலில் நடக்கும் என்கின்ற கேள்விகள் நாட்டு மக்கள் மத்தியிலும், கட்சிகளின் ஆதரவாளர்களின் மத்தியிலும் எழுந்துள்ளன.

இந்த நிலையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள தமது கட்சி தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்குக் கூட பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஸ மாகாண சபைத் தேர்தலே முதலில் நடக்கும் எனவும், அதற்கு கட்சி உறுப்பினர்கள் தயாராகும் படியும் கட்டளையிட்டுள்ளார்.

இந்தியா மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதால் மாகாண சபைத் தேர்தலே முதலில் நடக்கும். ஆகையால், அதற்கு தயாராகுமாறு அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை துரிதப்படுத்துமாறு வலியுறுத்தி தொடர் போராட்டத்தை தேசிய மக்கள் சக்தியும் (ஜே.வி.பி) முன்னெடுத்துள்ளது.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றார்.

மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் ஆளுநர்களினால் நிர்வகிக்கப் படுகிறது. அரசியலமைப்பு ரீதியில் ஆளுநர்களின் நிர்வாகம் இடம்பெற்றாலும் அது முறையற்றது. மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் ஊடாகவே நிர்வகிக்கப்பட வேண்டும் என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாண சபைகள் வெள்ளை யானை போல் செயற்படுகின்றன என்றும், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் அல்லது அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்து மாகாண சபை முறைமையையும் இரத்து செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

இதுபோன்ற கருத்துகள் வெளியாவதையடுத்து மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை. இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 2024ஆம் ஆண்டே நடைபெறும் என்றும் கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றை இரத்துச் செய்வதற்கான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும் பிரதமருமான தினேஸ் குணவர்தனவின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் குழுக்




கூட்டத்தின்போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

குறித்த ஆலோசனைக் குழுவில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இது தொடர்பான யோசனையை முன்வைத்திருந்ததாக அவர் தெரிவித்தார். இதனால் அனைவரும் எதிர்பார்த்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இப்போதைக்கு நடைபெறாது என்றே நம்பலாம்.

இந்த நிலையில், இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபைகளுக்கான தேர்தலை முதலில் நடத்த அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், இவ்வருடம் தேர்தல் எதனையும் நடத்த வாய்ப்பில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தற்போது தெரிவித்துள்ளார். கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை நிறைவு செய்யாமல், செப்ரெம்பர் மாதத்திற்குள் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்றும், நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னரே தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனின், இந்த வருடத்தில் எந்தவொரு தேர்தலும் நடைபெறாவிட்டால் அடுத்த வருடம் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவே வாய்ப்புள்ளது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அதனையே விரும்புவதாகத் தெரிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ மக்கள் போராட்டத்தினால் பதவி விலகியதையடுத்து ஓர் இடைக்கால ஜனாதிபதியாகவே ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார். பொருளாதார நெருக்கடியில் கடுமையாக சிக்கியிருந்த நாட்டை படிப்படியாக விடுவித்து வரும் பொறுப்பை ஓரளவிற்கேனும் ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டுள்ளார் என்பதை மறுக்க முடியாது. இதனால் அடுத்த ஜனாதிபதியாகத் தன்னையே மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நம்பிக்கை ரணில் விக்ரமசிங்கவிடம் ஏற்பட்டுள்ளது.

தற்போது நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவி வகித்தாலும், நாடாளுமன்றம் பொதுஜன பெரமுனவின் பிடியிலேயே உள்ளது. இதனால் மக்கள் ஆணையுடன் தான் ஜனாதிபதியாக வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். உண்மையில் ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொண்டால் கூட அடுத்த ஜனாதிபதியாக முதலிடத்தில் ரணில் விகரமசிங்கவே தெரிகின்றார்.

பொதுஜன பெரமுனவில் பசில் ராஜபக்ஸ ஜனாதிபதி வேட்பாளராகப் பெயரிடப்படலாம் என பொதுஜன பெரமுன கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அவருக்கான வெற்றிவாய்ப்பு இல்லை என்றே கூறலாம். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு அந்த வாய்ப்பு கிடைக்குமா என்பதும் சந்தேகமே.

சிக்கலான காலகட்டத்தில் சஜித் நாட்டை பொறுப்பேற்றிருந்தால் அவருக்கான வாய்ப்பு உறுதியாக இருந்திருக்கும். இப்போது அவர் எதிர்கட்சித் தலைவராக இருந்துகொண்டு அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிரான கருத்துகளை மட்டுமே தெரிவித்து வருகின்றார். இது மக்கள் மத்தியில் அவருக்கு ஒரு பின்னடைவையே ஏற்படுத்தி வருகின்றது.

இவை இவ்வாறிருக்க, இவ்வருடம் ஒரு தேர்தல் நடைபெறுமானால் அது இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபைகளுக்கான தேர்தலாகவே இருக்கும். இவ்வருடம் எந்தவொரு தேர்தலும் நடைபெறாமல் அடுத்த 2024ஆம் ஆண்டுதான் தேர்தல்கள் நடைபெறுமானால் முதலாவது தேர்தலாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்பே அதிகம் உள்ளது எனலாம்.

# இங்ஙனம் சூழ்நிலை

இலை குழை பசும்புல் தண்ணீர் ஊட்டித்
தசை வளர்த்து அதன்
குடலும் தலையும் இறைச்சியும்
உண்பதற்காக
கழுத்தில் கயிறு கட்டித்
தொங்கவிடுகின்ற
ஆட்டுக்கிடாய்போல்
கைகால் வாய் கட்டப்பட்டுத்
தலை கீழாகத் தொங்குகின்றது
அருமையான அப்பாவி மனித உயிர்.

காதுக்குள் யானைக்குக் குறட்டியால்
குத்துவதுபோல் நாதியற்றோருக்கு
இரும்புக் கம்பியைச் செருகுகின்றனர்
இரக்கமற்ற தசை இதயம் கொண்டோர்

சாக்கினுள்ளே முகத்தை அமத்திப்
பிடித்து
அடர்த்தியான மிளகாய்ப் புகையை
மூக்கினுள்ளே இழுத்து ஆழமாகச்
சுவாசிக்கச் செய்கின்றனர் கொடியோர்

பிரம்படி, தடியடி வாங்கிய
உடல் முழுவதும்
வரிக்குதிரைபோல் சிவப்புக் கறுப்புக்



கோடுகள்.

இறுதியில்
கன்னத்தில் அழுத்திய கைத்துப்பாக்கிக்
குண்டுகள்
மூளையைத் துளைத்துச் செல்கின்றன.

நெற்றியால் வழிந்து சிந்திச்சிந்தித்
தான்வாழப் பிறந்த இனிய பூமியின்
மண்ணை
ஆரத் தழுவுகின்றது
கருத்துச் சுதந்திரமற்ற
பச்சை இரத்தம்;.



முத்துராஜா



INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8

## நாமும் நமது இல்லமும் 633

# வட்டி வீத அதிகரிப்பு 4.75%



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

எதிர்பார்த்தது போலவே ஜுன் 07, 2023 அன்று கனடிய மத்திய வங்கி மேலும் 0.25% அதிகரித்து 4.75%ஆக புதிய வட்டிவீதம் காணப்படுகின்றது. கடந்த சில மாதங்களாகக் கனடிய ஆதன வியாபாரம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் மத்திய வங்கி காணப்படுகின்றது.

அவ்வாறு கட்டுப்படுத்தா விட்டால் 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எற்பட்டதுபோல ஆதன விலை அதிஉச்சத்தை மீண்டும் அடையலாம், பணவீக்கமும் அதிகரிக்கலாம் என்பதால் வட்டி அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் 02, 2022இல் இருந்து ஏற்படுத்திய வட்டி வீத அதிகரிப்பைத் தொடர்ந்து பணவீக்கம் குறைந்து வந்தது. எனினும், மார்ச் 2023, ஏப்ரல் 2023இல் மத்திய வங்கி வட்டி வீத அதிகரிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தது. மீண்டும் ஆதன வியாபாரம் விறு பெறத் தொடங்கியது.



அத்துடன் பணவீக்கம் பெரிதளவில் இறக்கம் காணப்படவில்லை. இதனால் ஜுன் 07, 2023இல் மீண்டும் 0.25% அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. (மே 2023இல் ரொறொன்ரோ ஆதன விலை 3.7%இனால் அதிகரித்தது.)

ஜுலை 12, 2023இல் மேலும் 0.25% அதிகரிக்கக்கூடும் அல்லது அதிகரிப்பில் மாற்றம் ஏற்படாமல் இருக்குமா என்று இந்த மாதத்திலும் (ஜுன்) அடுத்த மாதத்தின் தொடக்கத்திலும் ஏற்படும் பொருளாதார நிலைக்கு ஏற்ப தெரிய வரலாம்.

கனடாவில் குறிப்பாக ரொறொன்ரோவில் விலை உயர்ந்த பகுதியில், 1972இல் ஒருவர் தனி வீட்டை $17,000இற்கு வாங்கியிருந்தார். (தனி வீடு, நில அளவு 50x120. கார் தரிப்பிடம் உட்பட) அப்பொழுது அவரின் வருடாந்த வருமானம் ஏறக்குறைய $17,000 ஆகும். அவரின் வருமானத்திற்கும் ஆதன விலைக்கும் உள்ள தொடர்பு 1:1 ஆகும். ஆதன விலையும், வருடாந்த வருமானமும் ஏறக்குறைய சமமே.

இன்று ஒருவரின் வருமானம் $100,000ஆக இருந்தால் அவரால் வாங்கக் கூடிய ஆதனத்தின் விலை $500,000 ஆகும். அதாவது வருமானத்தின் 5 மடங்கு என்ற விகிதத்தில், அடமானக்கடன் பெறக்கூடிய தாக உள்ளது. இன்று ரொறொன்ரோவில் $500,000இற்கு தனி வீடு வாங்குவது என்பது கனவில் கூட நினைக்க முடியாதது.

இதே ஆதனம் இன்று விற்கும் விலை $1.4 மில்லியனாக உள்ளது. $100.000 வருடாந்த வருமானம் உள்ள ஒருவரால் இதனை வாங்க முடியவில்லை. ஆதன விலையின் வளர்ச்சிக்கு ஏற்ப தனிநபரின் வருமானம் அதிகரிக்கவில்லை என்பது கசப்பான உண்மை. ஏறக்குறைய கடந்த பத்து (10) வருடங்களில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு மிகவும் அதிகமாக உள்ளது. குறிப்பாக கோவிட்-19இன் மாற்றத்திற்குப் பிறகு சகலவழிகளிலும் நிலைமைகள் மாறியுள்ளன. கோவிட்-19இன் பின்பாக ஏற்பட்ட பாரிய வட்டி இறக்கம் ஆதன விலையின் வியாபாரத்திலும், விலையிலும் அதிக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 1990களிற்குப் பிற்பாடு பிறந்தவர்களிற்குத் தமது வருமானத்தில் சேகரித்து ஆதனம் வாங்குவது இலகுவல்ல. பெற்றோரின் உதவியுடனே இவர்கள் ஆதனத்தை வாங்க முடியும். இல்லாவிடின் வாடகையே இவர்களிற்கு வழிகொடுக்கும். இன்றைய நிலைமையை ஆராயும்போது, இன்றைய சந்ததிக்கு முற்பட்ட சந்ததியே அதிகளவு வீட்டு உரிமையை கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

எனினும், மூன்று அரசுகளும் புதியவர்கள் (1990இற்குப் பிற்பாடு பிறந்தவர்களிற்கு) ஆதனம் வாங்குவதற்குப் பலவிதமான புதிய ஊக்குவிக்கும் முயற்சிகளை செய்கின்றது. இது எவ்வாறு பலன்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)



# கனடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இதுவே 2023 ஜுன் 07ஆம் திகதி கனடிய வங்கி அடிப்படை வட்டிவீதத்தை 0.25% ஆல் அதிகரித்து 4.75%ஆக உயர்த்திய தற்குரிய காரணம் என CBC ஊடகம் தெரிவித்துள்ளது. முதலீட்டாளர்களும் பொருளாதார நிபுணர்களும் மத்திய வங்கி தனது அடிப்படை வட்டிவீத அதிகரிப்பை




இத்துடன் நிறுத்திக் கொள்ள மாட்டாது என எதிர்வு கூறுகின்றனர். கனடிய வங்கி எதிர்வரும் மாதங்களில் தனது அடிப்படை வட்டி வீதத்தை அதிகரிக்கும் என்று திடமாக நம்புகின்றனர். கனடிய வங்கியின் அடுத்த அறிவிப்பு ஜுலை 12ஆம் திகதி வரவுள்ளது. அப்போது கனடிய வங்கி தனது அடிப்படை வட்டிவீதத்தை 5.25% இற்கு அதிகரிக்கலாம் என பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஜுன் 07ஆம் திகதி கனடிய வங்கி தனது அடிப்படை வட்டி வீதத்தை 4.75%இற்கு அதிகரித்ததுடன் கனடாவின் பிரதான வங்கிகள் தங்களது முதன்மை கடன் வீதத்தை (Prime lending rate) 6.95%ஆக அதிகரித்து விட்டன. இந்த வட்டி வீத அதிகரிப்பிற்கு முன்னரே $500,000 அடமானம் உள்ள ஒருவரின் மாதாந்தக் கட்டணம் $1000இற்கு மேல் அதிகரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் பொருளாதார நிபுணரான Armine Yalnigyan கனடிய வங்கியின் அடிப்படை வட்டிவீத அதிகரிப்பை கேள்விக்குட்படுத்து கிறார். இது பணவீக்கத்தின் அடிப்படைக் காரணங்களை மாற்ற மாட்டாது வருமானம் குறைந்த கனடியர்களை மேலும் பாதிப் படையச் செய்யும் என்றார். பணவீக்க அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருப்பது அடமான வட்டி வீதமாகும். இது கடந்த ஆண்டில் மட்டும் 28%ஆல் அதிகரித்துள்ளது என்றார். யார் அடமான வட்டிவீத அதிகரிப்பிற்குக் காரணமானவர் எனக் கேள்வி எழுப்புகிறார் Armine Yalnigyan. அவர் கனடிய வங்கியின் அடிப்படை வட்டிவீத அதிகரிப்பு பணவீக்க அதிகரிப்பிற்கு ஒரு காரணம் என்கிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அடிப்படை வட்டிவீத அதிகரிப்பு பணவீக்கத்தைக் குறைக்க ஒரு மிகவும் சரியான காரணி அல்ல. ஆனால் இதைத்தான் 1980ஆம்



ஆண்டில் இருந்து நாங்கள் செய்துகொண்டு வருகிறோம். இவ்வாறு அடிப்படை வட்டி வீதத்தை அதிகரித்து பொருளாதார மந்தநிலையை உருவாக்கி விலைகளைக் குறைப்பதன் மூலமே பணவீக்கத்தைக் குறைக்கலாம் என்பதே வங்கிகளின் கொள்கையாக இருக்கிறது என்றார்.

சென்றல் 1 என்னும் நிறுவனத்தின் பொருளாதார வல்லுநரான Brian Yu, CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் கனடிய வங்கி அடிப்படை வட்டிவீதத்தை உயர்த்தியது தனக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது என்றார். தற்போதைய நிலையில் ஒரு வட்டிவீத உயர்வு அவசிய மற்றது எனத் தான் நினைப்பதாகக் கூறினார். கனடிய வங்கியின் அடிப்படை வட்டிவீத உயர்வின் உண்மையான முழுத் தாக்கத்தையும் உணர பொதுவாகக் குறைந்தது 18 மாதங்கள் தேவை. இவ்வாறு இருக்கையில் கனடிய வங்கி தற்போது ஏன் அடிப்படை வட்டி வீதத்தை உயர்த்தியது என அவர் கேள்வி எழுப்பினார்.

கனடியப் பிரதமரின் வீணான செலவினங்கள்தான் கனடாவின் பண வீக்கத்திற்குக் காரணம் எனப் பழமை வாதக் கட்சியின் தலைவர் Pierre Poilievre ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நீங்கள் உயிர் வாழ்கிறீர்கள்

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.premrawat.com**

நீங்கள் அமைதியை அனுபவிப்பது சாத்தியம். நீங்கள் செய்கின்ற மற்றைய விடயங்களை விடுத்து நீங்கள் அதனை செய்ய வேண்டும்.”

ஒரு தடவை அனுமானிடம் நீங்கள் ஏன் ராமரை பின்பற்றுகிறீர்கள் அவர் உங்களுக்கு என்ன செய்தார் என கேட்டார். அதற்கு அனுமான் கொடுத்த விடை இதுதான் “அவர் என்னை மேலும் சிறந்த ஒரு மனிதர் ஆக்குகிறார். அதனால்தான் நான் அவரை பின்பற்று கிறேன்” என கூறினார். நாங்கள் எல்லோரும் மேலும் சிறந்த மனிதர்கள் ஆவதற்கு ஆர்வம் கொள்ள வேண்டும் இல்லையா?

தேடல் உள்ளவர்கள், தம்மை மேம்படுத்த விரும்புவோர் மேலும் நன்றாக செயல் களை செய்ய விரும்புவோர், தம் உள்ளே செல்ல விரும்புவோர், அவர்களுக்குக் குரு மிகவும் முக்கியமானவர். குரு ஏன் முக்கியமானவர் என்றால் நான் சொல்வது உண்மையான குரு. உண்மையான குரு உங்களது ஒளியை ஏற்றுவார். தனது ஒளியை அல்ல. அதுதான் பெரிய வித்தியாசம். உங்களது வாழ்க்கையில் உங்களது உள்ளத்தில் உள்ள ஒளியை அவர் ஏற்றுவார். அதன்பின்னர் அங்கு ஒரு பொழுதும் இருள் ஏற்பட போவதில்லை. ஆனால் இந்தக் காலத்தில் அவ்வாறு நடைபெறுவதில்லை. குரு உண்மையான குரு அல்லாதவர். ஆனால், அவர்கள் உங்களது விளக்கை ஒளியேற்றுவதில்லை. அவர்கள் உங்களுக்காக ஒரு விளக்கை ஒளியேற்றுவர். நீங்கள் அவர்களது கட்டுப்பாட்டில் இருக்கும்வரை அந்த ஒளி அங்கு இருக்கும். அந்த வெளிச்சத்தை நீங்கள் ஏற்றவில்லை. அந்த நேரம் அது உங்களது வெளிச்சமும் அல்ல அதுதான் அந்த வித்தியாசம்.

இது எப்படி என்றால் நீங்கள் ஒரு அறை யின் உள்ளே செல்கிறீர்கள்.ஒரு அறை உள்ளது அந்த அறையினுள்ளே உங்களால் கற்பனை செய்யக் கூடிய மிகவும் அற்புதமான பொருட்கள் உள்ளன அங்கே உணவு உள்ளது படுக்கை உள்ளது எல்லாமே உள்ளன. ஆனால் அங்கு இருளாக உள்ளது அங்கு செய்ய வேண்டிய முதலாவது வேலை என்ன வென்றால் அந்த அறையில் முதலில் ஒளியை ஏற்றுங்கள் இது உங்களது சொந்த வாழ்க்கை தான், அந்த அறை. முதலாவதாக அறையில் ஒளியை ஏற்றுங்கள் நீங்கள் அங்கு ஒளியேற்ற மறந்து விடும் பொழுது அங்குள்ள எல்லாவற்றின் மேலும் மோதுகிறீர்கள் இப்பொழுது அங்குள்ள தட்டுக்கள் எல்லாம் கீழே விழுந்து உடைகின்றன அவை உங்களது கால்களை வெட்டு கின்றன இது உங்களுக்கு இன்றைய உலகின் நிலையை நினைவூட்டவில்லையா?

மக்கள் தங்களுக்கு தாங்களே வலிகளை உருவாக்குகின்றார்கள் அவர்களே வேதனையை உருவாக்குகின்றார்கள் அங்கு நிலைமை மிகவும் மோசமாக உள்ளது ஏனெனில் அவர்கள் அந்த அறையில் ஒரு பொழுதும் ஒளியை ஏற்றவில்லை ஏனெனில் அவர்கள் அந்த அறையில் முதலிலேயே லைட்டை போட்டு இருந்தால் அந்த அறையில் எல்லாமே எவ்வளவு அழகாக இருக்கின்றன என்பதனை அவர்கள் கண்டிருப்பர் பொருட்கள் நிலத்தில் விழுந்து அவர்களை காயப்படுத்துவதை தவிர்த் திருக்கலாம் ஏனெனில் அவர்கள் அந்த லைட்டை ஒருபொழுதும் போடவில்லை.

நம்முள்ளே அமைதி உள்ளது பற்றி பேசினோம். இந்த உலகத்திலே அமைதியற்ற தன்மையும் உள்ளது. போர்களினாலே எதிர்மறையான விஷயங்கள் வருகின்றன. இவ்வாறு தொடர்ந்து தொடர்ந்து நடை பெறுபதை ஒருவர் எவ்வாறு உடைத்து இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் மன்னித்து முன்னேறிச் செல்வது?

ஒரு மனிதனின் வாழ்க்கையில் இவைகள் எல்லாம் நடைபெறுகின்றன ஏனெனில் அந்த லைட் போடப்படவில்லை எது நிஜமானது எது நிஜம் அற்றது என்பது உங்களுக்குத் தெரியாதுள்ளது. குரல்கள் கேட்கின்றன வெளியே உள்ள குரல்களை நிறுத்த முடியும் அதற்காக காதுகளை மூடும் இயர் பிளக்குகளை பாவிக்கலாம் ஆனால் இந்த இரண்டு காதுகளின் இடையே உள்ள சத்தத்திற்கு உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது அது அங்கே இருந்து கொண்டு உங்களை உயிருடன் கொல்கின்றது.

உறவுகளின் இடையே பல விஷயங்கள் நடைபெறுகின்றன. ஆனால் உண்மை யிலே நடைபெறுவதும் அதுவல்ல. பேசப்படுவதும் அதுவல்ல. ஆனால் அது உள்ளே மெதுவாக மெதுவாக கொதித்துக்கொண்டு இருக்கின்றது ஏன்? ஏனெனில் அந்த லைட் ஒருபொழுதும் போடப்படவில்லை நீங்கள் ஒரு பொழுதும் அது உண்மை அல்ல எனக் கூறவில்லை எது நிஜமானது எது நிஜமானது அல்ல என நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் மிகவும் நிஜமானது ஒன்று உள்ளது அது இருந்தது இருக்கின்றது எப்பொழுதும் இருக்கும் அதுதான் அந்த எல்லையற்றது அது ஒரு பொழுதும் படைக்கப்படவும் இல்லை அது ஒரு பொழுதும் அழிவதுமில்லை அது இருந்தது இருக்கின்றது இருக்கும் நீங்கள் நான் நாங்கள் முன்னர் இருக்கவில்லை இப்பொழுது இருக்கின் றோம் இனிமேல் இருக்கப்போவதில்லை. அதுதான் உண்மை நாங்கள் மாயையின் மேலே கவனத்தை செலுத்துகின்றோம் இருக்கப்போகாததன் மீது கவனத்தைச் செலுத்துகின்றோம்.

நீங்கள் முன்னர் இருக்கவில்லை. இப்பொழுது இருக்கிறீர்கள். ஒரு நாள் நீங்கள் இருக்க போவதில்லை.

நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவ்வளவுதான் நீங்கள் அக்கறை கொள்ள வேண்டியது அவ்வளவுதான் ஏனெனில் ஒன்று எப்பொழுதும் இருந்தது இருக்கின்றது எப்பொழுதும் இருக்கும் எனவே நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் மாயை என்றால் என்ன? இருப்பதுபோல் தோன்றும் விஷயம் ஆனால் அது என்ன? எனது உனது என நீங்கள் கூறும் பொழுது எனது உனது என்பதுதான் மாயை என வரையறை செய்யப்பட்டுள்ளது.

எனது உனது என்பதுதான் மாயை அங்கிருந்துதான் மாயை உருவாகின்றது.

மனிதன் எத்தனை அழகாக மாறுவேடம் போட்டாலும் காலமும் சூழ்நிலையும் அவனது இயல்பு குணத்தைக் காட்டிக்கொடுத்துவிடும்.

# நானிலம் போற்றும் நட்பு - 23



- அகணி -
authorakani@gmail.com

"பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை." (அதிகாரம் பழமை, குறள் 803) என்ற குறளிற்கு "பழகியவர் உரிமைபற்றிச் செய்யும் செயலைத் தாம் செய்தது போலவே கருதி உடன்படாவிட்டால் அவரோடு தாம் பழகிய நட்பு என்ன பயன் தரும்." என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"உரிமையோடு நண்பர் செய்தனவற்றிற்கு உடன்படாவிட்டால் பழகிய நட்பினால் என்ன பயன்?" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"நட்பினர் செய்தவைகளைத் தாம் செய்தவைபோல் எண்ணாராயின் நட்பினால் பயன் இல்லை" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்." என்ற அறிவுரையை இந்தக் குறள் வழங்குகிறது.

உரிமையுடன் நண்பர் செய்வதை தாம் செய்வதாக முழுதாக ஏற்று நடக்க வேண்டும் என்ற கருத்தை இந்தக் குறள் கூறுகிறது.

பழமொழி நானூறு - பாடல் 141

"பாப்புக் கொடியாற்குப் பால்மேனி யான்போலத்
தாக்கி அமருள் தலைப் பெய்யார் - போக்கி
வழியராய் நட்டார்க்கு மாதவம் செய்வாரே
"கழிவிழாத் தோளேற்று வார்"

ஆபத்தில் உதவாத நண்பர்கள் : பாம்புக் கொடியை உடையவன் துரியோதனன். அவனுக்கு நண்பன் வெண்மேனியினனான பலராமன். பாரதப் போரினுள், அவன் தன் நண்பனுக்கு உதவியாக எதிரிகளைத் தாக்கிப் போரிலே ஈடுபடவில்லை. அவனைப் போலத் தம் நண்பர்களுக்கு ஆபத்துக் காலத்தில் உதவாமல் அவரே அழிய விட்டுவிட்டுப் பின், 'அவர் ஆன்மா சாந்தியடைக' என்று பெருந்தவம் செய்பவர், உண்மை நண்பர்கள் ஆக மாட்டார்கள். அவர் செயல், திருவிழா பார்க்க வந்த குழந்தையை விழா முடியும் வரை தோளிலேற்றிக் காட்டாதிருந்த ஒரு தகப்பன், விழா முடிந்த பிறகு தோளில் ஏற்றிச் சுமந்து செல்வதைப் போன்றதாகும் என்பது இந்தப் பாடலின் கருத்து.

ஆபத்தில் உதவாத நண்பர் நண்பராகார். 'கழிவிழாத் தோளேற்றுவார்' என்பது பழமொழி. நண்பர்கள் ஆபத்திற்கு உதவும் சிறந்த பண்பை உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு.

இப்பொழுது காரியாசான் இயற்றிய சிறுபஞ்ச மூலம் என்ற நூலில் உள்ள பாடல்களில் வரும் நட்பு பற்றிய கருத்துகளை உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையை மூலமாகக் கொண்டு ஆராய்வோம்.

சிறுபஞ்சமூலம் என்பது ஐந்து சிறிய வேர்கள் என்று பொருள்படும். அவையாவன: சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்தரி வேர் என்பனவாம். இதுபோன்றே வில்வம், பெருங் குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை, இவற்றின் வேர்களைப் பெரும் பஞ்சமூலம் என்பர். சிறுபஞ்சமூலம் ஆகிய மருந்து உடல் நலம் பேணுமாறு போல, சிறுபஞ்சமூலப் பாடல்களில் குறித்த ஐந்தைந்து பொருள்களும் உயிர் நலம் பேணுவன. அதனால் இந்நூல் சிறுபஞ்சமூலம் என பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பவர். காரி என்பதுவே இவரது இயற்பெயர். ஆசான் என்பது தொழில் பற்றி வந்த பெயராகலாம். இவரை மாக் காரியாசான் என்று பாயிரச் செய்யுள் "மா" என்னும் அடை மொழி கொடுத்துச் சிறப்பிக்கின்றது. இவர் சைன சமயத்தார் என்பது இந்நூலின் காப்புச் செய்யுளால் அறியலாகும்.

பஞ்சமூலம் - பாடல் 16

"நட்டாரை ஆக்கி, பகை தணித்து, வை எயிற்றுப்
பட்டு ஆர் அணி அல்குலார்ப் படிந்து ஒட்டி,
துடங்கினார், இல்லகத்து, அன்பின் துறவாது. -
உடம்பினான் ஆய பயன்."
படிந்து - சேர்ந்து, இல் - குடி

நட்பு கொண்டாரைச் செல்வராக்கி, பகைவரைத் தாழ்த்தி, மாதரைச் சேர்ந்து தொடர்புற்று, சுற்றார் இடத்தும், தம் குடியிற் பிறந்தவரிடத்தும் அன்போடிருத்தல் ஆகியவையும் இப்பிறப்பின் பயனாகும்.


நண்பரை நல்ல நிலையில் இருக்குச் செய்தலும் இந்தப் பிறப்பின் பயனாகும் என்கிறது இந்தப்பாடல்.

பஞ்சமூலம் - பாடல் 24

"பெருங் குணத்தார்ச் சேர்மின் பிறன் பொருள் வவ்வன்மின்
கருங் குணத்தார் கேண்மை கழிமின் ஒருங்கு உணர்ந்து,
தீச் சொல்லே காமின் வரும் காலன், திண்ணிதே-
வாய்ச் சொல்லே அன்று வழக்கு.

கழிமின் - விடுங்கள்

நன்மை குணமுடையவர்களைச் சேரவேண்டும். பிறர் பொருளைக் கவராதிருக்க வேண்டும். தீக்குணத்தாருடன் நட்பு விடவேண்டும். தீய சொற்களைச் சொல்லாதிருக்க வேண்டும். எமன் நிச்சயம் வருவான். இஃது உலக வழக்கமாகும் என்பது இந்தப் பாடலின் கருத்து.




தீய குணம் கொண்டவர்களுடன் நட்பைத் தவிர்க்க வேண்டும் என்பதை இந்தப் பாடலும் வலியுறுத்துகிறது.

பஞ்சமூலம் - பாடல் 46

"நசை கொல்லார், நச்சியார்க்கு என்றும் கிளைஞர்
மிசை கொல்லார் வேளாண்மை கொல்லார் இசை கொல்லார்
பொன் பெறும் பூஞ் சுணங்கின் மென் முலையாய்! நன்கு உணர்ந்தார்
என் பெறினும் கொல்லார், இயைந்து."

கொல்லல் - கெடுத்தல், சுணங்கு - தேமல்
பொன்னால் ஆன அணிகலன்களை அணிந்த இளமையான மார்பினை உடையவளே! நன்கு உணர்ந்தோர் தம்மை விரும்பினவரது விருப்பத்தைக் கெடுக்க மாட்டார், நண்பரது விருப்பத்தையும் கெடுக்க மாட்டார், தமக்கு வரும் புகழையும் கெடுக்க மாட்டார், ஒருவர் மற்றவர்களுக்கு உதவி செய்யும் தன்மையைக் கெடுக்க மாட்டார். அறத்தை அறிந்தவர் ஒருயிரையும் கொல்ல மாட்டார் என்பது இந்தப் பாடலின் கருத்து.

உணர்ந்து அறியும் பாங்கினை உடையவர்கள் தமது நண்பர்களின் விருப்பங்களை குழப்ப மாட்டார் என்பதையும் இந்தப் பாடல் கூறுகிறது.

பஞ்சமூலம் - பாடல் 95

"இன் சொல்லான் ஆகும், கிளைமை இயல்பு இல்லா
வன் சொல்லான் ஆகும், பகைமை மன் மென் சொல்லான்
ஆய்வு இல்லா ஆர் அருளாம் அவ் அருள் நல் மனத்தான்
வீவு இல்லா வீடு ஆய் விடும்."

இனிய சொற்களால் நட்பும், வன்சொற்களால் பகையும் உண்டாகும். மென் சொல்லினால் பெருமையும், அருளும் உண்டாகும். அவ்வருளால் வீடு பேறு உண்டாகும் என்பது இந்தப் பாடலின் கருத்தாகும்.

இனிய சொற்களைப் பேசுவதால் நட்பு உண்டாகும். என்ற கருத்தையும் இந்தப் பாடல் கூறுகிறது.

இவ்வாறாகப் பல நீதிநூல்களில் நட்பு பற்றிய கருத்துகள் காணப்படுகின்றன. ஒரேவிதமான கருத்துகள் பல நூல்களில் இருப்பினும் எங்கெல்லாம், எத்தகைய நட்பு பற்றிய கருத்துகள் உள்ளன என்பதை அறியும் பொருட்டு பல நூல்களிலும் உள்ள நட்பு பற்றிய கருத்துகள் ஆராயப்பட்டன.

இந்த இதழிலும் நீதி நூல்கள் சிலவற்றில் நட்பு பற்றிய அறிவுரைகளை ஆராய்ந்தோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)



# பாரதிராஜா திட்டிகிட்டே இருப்பாரு! - தங்கர்பச்சான் நேர்காணல்

## நேர்கண்டவர்: தளவாய் சுந்தரம்

தமிழில் சிறந்த இயக்குநர்களில் ஒருவரும் ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், கருத்தாளர் எனப் பன்முகம் கொண்டவருமான தங்கர்பச்சான், ஒரு சிறு இடைவெளிக்குப் பின்னர் 'கருமேகங்கள் கலைகின்றன' என்ற புதிய படத்துடன் மீண்டும் வருகிறார். இதனை முன்னிட்டு அவரை சந்தித்தோம்.

**உங்கள் படத்தின் தலைப்பில் இருந்தே தொடங்கலாம். 'அழகி', 'சொல்ல மறந்த கதை', 'ஒன்பது ரூபாய் நோட்டு', 'களவாடிய பொழுதுகள்', 'அம்மாவின் கைப்பேசி'; இப்போது 'கருமேகங்கள் கலைகின்றன'. எல்லாமே அழகான, கவித்துவமான தமிழ் தலைப்புகள். உங்கள் படங்களுக்கான தலைப்புகளை எப்படி தேர்ந்தெடுக்கிறீர்கள்?**

தமிழராக இருப்பதால், தமிழிலேயே சிந்திப்பதால் தமிழில் தலைப்பு வைக்கிறேன். தமிழ் படம்தானே எடுக்கிறோம். அதன் தலைப்புக்கு எதற்கு வேற்று மொழியிடம் கடன் வாங்கணும். நமக்கு ஒரு கடமையும் இருக்கு, இல்லையா?

**ஆனால், இப்பலாம் படத்தின் தலைப்புகள் 'காஃபி வித் காதல்', 'பீஸ்ட்', 'லவ் டுடே' மாதிரி ஆங்கிலத்தைக் கலந்து வைக்கப்படுகின்றன. அதுபோன்ற சூழலில் 'கருமேகங்கள் கலைகின்றன' போன்ற தூய தமிழ் தலைப்பு எடுபடும் என்று கருதுகிறீர்களா?**

நமக்கென்று ஓர் அடையாளம் இருக்கணும். அந்த பொறுப்பு இல்லாமல் இருப்பதன் வெளிப்பாடுகள்தான் நீங்கள் சொன்ன தலைப்புகள் எல்லாமே. அவங்களுக்கும் ஒரு கடிவாளம் போட்டால் வழிக்கு வந்துடுவாங்க. வரிச்சலுகை வேண்டுமானால் தமிழில்தான் தலைப்பு வைக்கணும் என்று மறுபடியும் சொல்லிப் பாருங்க, எல்லோரும் ஓடி வந்துடுவாங்க.

**'கருமேகங்கள் கலைகின்றன' படம் முழுவதுமே 'அன்பு தேடலு'க்கான படம் என்று சொல்லியிருந்தீங்க. எப்படி என்று விவரிக்க முடியுமா?**



இன்று நம்ம எல்லோருக்குள்ளும் ஒரு ஏக்கம் இருக்கு, ஒரு தவிப்பு இருக்கு. நம்ம உறவுகளோடு நேரடியா பேசுறது, அவங்களோட உரையாடுறது, அவங்களோட இருப்பது எல்லாமே குறைஞ்சி போச்சு. கால ஓட்டத்துல எல்லாமே குறையுது. அடுத்த அறையில இருப்பவங்களோட தொலைபேசியில பேசிக்கிட்டு இருக்கோம், குறுஞ்செய்தி அனுப்பிகிட்டு இருக்கோம். அன்பு, கோபம், காதல்னு உணர்ச்சிகள் எல்லாமே இன்னைக்கு கருவிகளோடதான் காட்டிகிட்டு இருக்கோம். அன்ப நாம விட்டுட்டோம். உறவுகள போற்ற மறந்துட்டோம். எல்லாமே இன்னைக்கி பெயரளவுக்குதான் நடக்குது. குறுஞ்செய்தியில அன்ப காட்டுறது, ஒரு கேக் வெட்டி பிறந்த நாள கொண்டாடிட்டு சரி பண்ணிக்கிறது. இப்படியாயிடுச்சி வாழ்க்கை. எல்லோரும் சேர்ந்திருந்து வாழ்க்கைய அனுபவிக்கிறதெல்லாம் போயிடுச்சு. அதைப் பற்றிதான் இந்தப் படம் பேசுது.

**இதில் யோகிபாபு நடித்துள்ளார். யோகி பாபு தமிழ் சினிமாவின் முக்கியமான நட்சத்திரமாய் இன்று மாறியிருக்கிறார். இந்த படத்தில் அவரை இயக்கிய அனுபவம் எப்படி இருந்தது?**

அவர் நல்ல நடிகர். இதுவரை அவரை சரியா பயன்படுத்தலை. அவர மட்டுமில்ல இங்க இருக்கக்கூடிய பல நல்ல நடிகர்கள நாம சரியா பயன்படுத்தல. மிக அபூர்வமான, சிலருக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய முக அமைப்பு யோகிபாபுக்கு. அந்த முகமும் அவரது உடல் மொழியும் இந்தப் பாத்திரத்துக்கு ஏற்புடையதா இருந்துச்சு. இந்த கதைய தேர்வு பண்ணது யோகிபாபுதான். அவர் இல்லன்னா நான் வேற ஒரு படத்தத்தான் எடுத்திருப்பேன். ரெண்டு கதை சொன்னேன். சரி சார் செய்வோம்னார். ஆனால், முழு நிறைவு அவர் மனசுல இல்லன்னை பட்டுச்சு.

"இன்னொரு கதை இருக்கு, ஆனா அது கொஞ்சம் தீவிரமான கதை. நீங்க எதிர்பார்க்கிறது எல்லாம் இருக்காது. அதனால நீங்க அதை செய்ய மாட்டீங்க"ன்னு சொன்னேன். சொல்லுங்க சார் அப்படின்னார். கதைய கேட்ட உடனே, "சார் இதைத்தான் சார் பண்ணனும். நான் தேதி தர்றேன், நீங்க பண்ணுங்க சார்"னார். எனக்கு வியப்பா இருந்துச்சி. ஒரு வாழ்வியல் தொடர்பான கதைய அவ்வளவு எளிதா உள்வாங்கிட்டார். அவரால் அதன்பிறகு கொஞ்சம் பெரியதாக திட்டமிட்டு இந்தப் படத்தை பண்ணினோம். இன்னும் ஐந்து நாட்கள் வந்து நடிச்சி கொடுத்திருந்தார்னா இன்னும் சிறப்பா இருந்திருக்கும். ஆனா, அவருக்கு நேரம் இல்லை. ஆனாலும், பிரச்சினையில்லை படம் நல்லா வந்திருக்கு.

**'கருமேகங்கள் கலைகின்றன' படத்துல நான்கு இயக்குநர்களை நடிக்க வைச்சிருக்கீங்க. பாரதிராஜா, எஸ்.ஏ. சந்திரசேகர், ஆர்.வி. உதயகுமார், கவுதம் வாசுதேவ் மேனன் _ நான்கு பேருமே நான்கு விதமான படங்களை எடுப்பவர்கள். இவர்கள் கதையை கேட்டுவிட்டு என்ன சொன்னார்கள்?**

எல்லோருக்குமே ரொம்ப பிடிச்சிருந்திச்சி. முதல்ல பாரதிராஜா அண்ணன்டதான் சொன்னேன். நீங்கதாண்ணே காதா நாயகன். 80 சதவிகிதம் நீங்கதான் வர்றீங்கன்னு சொன்னேன். கேட்டுட்டு ரொம்ப உற்சாகமாயிட்டாரு. எல்லோருட்டயும் சொல்லியிருக்கார்.

பாரதிராஜா அண்ணன் என்னிடம் சொன்னது இது: 'நான் நடிக்கத்தான் முதல்ல சென்னைக்கு வந்தேன். அப்புறம் எனக்கு தெரியாத ஒரு துறையில இறக்கி விட்டுட்டாங்க. அதுல வெற்றி பெற்றுட்டேன். முதல்ல இயக்கம்னாலே என்னன்னு எனக்கு தெரியாது. இப்ப அதுலயே பேர் வாங்கிட்டேன். கடைசி காலத்துல நடிக்கணும்னு இப்படியெல்லாம் வாய்ப்புகள் வருது. படத்தை பார்க்க ஆவலா இருக்கேன்' அப்படின்னார்.


இப்படியொரு பாத்திரத்தை இவ்வளவு சிறப்பா அவரால மட்டும்தான் செய்ய முடியும். உண்மையிலயே, இந்த 83 வயசுல அவருடைய ஆர்வம் ஆச்சர்ய மாத்தான் இருக்கு. அவர ரொம்ப கஷ்டப் படுத்திட்டேன். இன்னமும் திட்டிட்டேதான் இருப்பாரு. ஆனால், இந்த கஷ்டங்கள் எல்லாம் எனக்காகவா, படைப்புக்காகத் தானே. ஓர் இயக்குநரா அவருக்கும் அது தெரியும்.

கௌதம் வாசுதேவ் மேனனும் கதைய கேட்டுட்டு ரொம்ப உணர்ச்சி வசமாயிட்டார். எல்லா படத்துலயும் அவர் ஒரு எதிர்மறையான பாத்திரம்தானே செய்றார். கௌதம்னா வில்லன்னு ஆயிடுச்சி. இதுல அப்படி இல்ல. முழுமையா ஓர் உணர்ச்சிகரமான, ஒரு மகனா, ஒரு தந்தையின் பிள்ளையா, நிச்சயம் எல்லாரையும் கண் கலங்க வச்சிருவாரு. ஏன்னா, எல்லா வீட்டுலயும் தந்தைக்கு ஒரு மகன் இப்படி இருக்கான்.

கௌதம் இந்த படத்துல அவ்வளவு ஈடுபாடாயிட்டார். நடிச்சோம் போனோம்னு இல்லாம தினமும் என்னிடம் பேசிருவார். அவரும் அவர் எடிட்டர் ஆண்டனியும் சேர்ந்து தனியா ஒரு டிரைலர் தயார் பண்றாங்க. அவர் இவ்வளவு ஈடுபாடு காட்டக் காரணம், அவருக்கும் அவர் அப்பாவுக்குமான ஒரு பிணைப்பு இருக்கும்னு நெனைக்கிறேன்.

எஸ்.ஏ. சந்திரசேகர் அண்ணன் ஒரு ஜஏஎஸ்ஸா வர்றார். பாரதிராஜா அண்ணன் பாத்திரத்துக்கு ஏற்ற ஒரு பாத்திரம் நீங்கதான் செய்யணும்னு சொன்னதும் மகிழ்ச்சியா வந்திட்டார். பொதுவா வயசாயிட்டா ஞாபக சக்தி குறைஞ்சி போயிரும்னு சொல்வாங்க. ஆனா, அது அவர்ட்ட இல்ல. ஒரு

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)




A METROPIA
MASTER-PLANNED
COMMUNITY
UNLIMITED LIVING.
UNIONCITY in
Downtown Markham
• FREE ASSIGNMENT FOR A LIMITED TIME ONLY
• FREE RIGHT TO LEASE
• CAPPED DEVELOPMENT CHARGES
• 15% DEPOSIT ONLY BEFORE CLOSING
UnionCity is conveniently situated just steps away from Unionville GO Station, York University Markham Campus, and Markham PAN AM Centre.


LAWRENCE HILL
Luxury Urban Towns
$5000 Travel Voucher!!
1 Year Free Maintenance
Free EV Parking Upgrade*
Right to Lease
Free Assignment
Capped Development Charges
Private outdoor spaces (balconies and rooftop terraces)
10%
Deposit Only *
CONTACT OUR SALES TEAM
(416) 569-4948 | (647) 296-0596

# கனடா தமிழ் இலக்கியத்தோட்ட விருது விழா



குரு அரவிந்தன்


கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2022ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா ரொறொன்ரோவில் 2023 ஜுன் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றிருந்தது. ஆரம்பகால உறுப்பினரும், தற்போதைய செயலாளருமான எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்கள் நேரடியாக இந்த நிகழ்வுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த அமைப்புத் தொடங்கிய காலத்தில் இருந்து இந்த நிகழ்வுக்காக எனக்கு அவர் வருடாவருடம் அழைப்பிதழ் அனுப்பிவிட்டுத் தொலைபேசியிலும் அழைத்துச் சொல்லுவார். இம்முறை அவர் அழைத்தபோது நான் குறோசியாவில் இருந்தேன், அழைப்பிதழ் கிடைத்ததை அவருக்கு உறுதிப்படுத்தி, விழாவிற்கு வருவதையும் உறுதிப்படுத்தி இருந்தேன். நான் கனடாவில் 'தமிழாரம்' சிறுவர் பாடல்களை ஒளித்தட்டில் வெளியிட்டபோது அ. முத்துலிங்கமும், எஸ். ராமகிருஷ்ணனும் அதைப் புகழ்ந்து பாராட்டி எழுதி இருந்தனர். எனது சிறுவர் பாடல்கள் பற்றி, 'மூன்று குருட்டு எலி' என்ற ஒரு குட்டிக்கதையும் திரு அ. முத்துலிங்கம் அவர்கள் அப்போது எழுதியிருந்தார்கள்.



"ஐஸ்கிரீம் சாப்பிடும்போது ஒரு பதற்றம் இருக்கும், சாப்பிட்டால் முடிந்துபோகும். சாப்பிடாமல் விட்டாலும் உருகி அழிந்து விடும். சுவை இன்பத்தை நீடிக்க முடியாது. அதனால் கிடைக்கும் இன்பத்திலும் பார்க்க அது கொடுக்கும் ஏக்கமும் அவலமுமே கூடுதலாக இருக்கும். எனக்குக் கிடைத்த குரு அரவிந்தனின் புனைவுகளைப் படித்தபோது எனக்கும் இந்த அனுபவம் கிடைத்தது, அதாவது முடிந்துவிடுமோ என்று அடிக்கடி மீதிப் பக்கங்களை எண்ணிப் பார்க்க என்னைத் தூண்டியது. படித்தால் முடிந்துவிடும், ஆனால் படிக்கவேண்டும் என்ற ஆவல் மனதை நிரப்பியிருக்கும். புனைவுகளில் சுவை முக்கியம். அதனிலும் முக்கியம் அவை வரலாற்றின் ஒரு கூறை பதிந்து அதை அழியவிடாமல் காப்பது. எங்கள் சரித்திரத்தை அவை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். இந்த இரண்டும் குரு அரவிந்தன் படைப்புகளில் நிறைந்து கிடக்கின்றன." மூத்த எழுத்தாளரும், இந்த விழாவின் ஏற்பாட்டாளருமான ஒருவரிடம் இருந்து வாழ்த்துப் பெறுவதற்குக் கொடுத்து வைக்க வேண்டும். 25 வருட இலக்கிய சேவைப் பாராட்டு விழாவில் அ. முத்துலிங்கம் அவர்களிடம் இருந்து எனக்கு அந்தக் கொடுப்பனவு கிடைத்திருந்தது.

> என்றேனும் ஒரு நாள் நீ எந்த
> பிரச்சனையையும் சந்திக்கவில்லையோ
> அன்று, நீ தவறான பாதையில் சென்று
> கொண்டு இருகின்றாய்
> என்று உறுதி செய்து கொள்ளலாம்
> –சுவாமி விவேகனந்தர்

இந்த விழாவில் இலக்கிய நண்பர்களான: திரு. வ.ந. கிரிதரன், திரு லெ. முருகபூபதி ஆகியோர் கௌரவிக்கப்பட்டதால் முக்கியமாக நான் அங்கு சென்றிருந்தேன். நண்பர் முருகபூபதி அவர்கள் அவுஸ்ரேலியாவில் இருந்து இதற்காக வந்திருந்தார். இதைவிட எழுத்தாளர் திருமதி சிவசங்கரியும் விருது பெற்றதால், தமிழகத்தில் இருந்து வந்திருப்பதாகச் சொன்னார்கள். அவருடைய எழுத்துக்களின் வாசகன் என்ற வகையில் அவரைச் சந்திப்பதற்கும் ஆவலாக இருந்தேன். இதற்கு இன்னுமொரு காரணம் இருந்தது, அது என்னவென்றால் 2022ஆம் ஆண்டு தமிழக இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளில் சிறந்த சிறுகதைகளாக 69 சிறுகதைகளைத் தெரிவு செய்து அதில் சிறந்தகதையாக 'தாயகக் கனவுடன்' என்ற எனது சிறுகதைக்குத் 'தகவம்' சார்பாக நவம்பர் மாதத்தில் தெரிவு செய்து முதற்பரிசு தந்து அந்தக் கதையையும் வெளியிட்டிருந்தார்கள். இதற்கு திருமதி சிவசங்கரி அவர்கள் முதன்மை நடுவராகப் பணியாற்றியிருந்தார்.



எழுத்தாளர் திருமதி சிவசங்கரி அவர்களைச் சந்தித்து அவருடன் சிறிது நேரம் இலக்கியம் சார்ந்து உரையாடியதில் பெரு மகிழ்ச்சி அடைந்தேன். போட்டிக்கு எடுத்துக் கொண்ட கதைகளில் தனக்கு மிகவும் பிடித்த கதையாகத் 'தாயகக் கனவுடன்' என்ற கதை இருந்தாகக் குறிப்பிட்டு, எழுத்துப் பணியைத் தொடருங்கள் என்று வாழ்த்திப் பாராட்டினார். பாரபட்சமின்றி எனது கதையைத் தெரிவு செய்ததற்காக அவருக்கு நன்றியும் கூறியிருந்தேன். இதே போன்றதொரு பாராட்டை 2002ஆம் ஆண்டு சுமார் 20 வருடங்களுக்குமுன் 'தாய்மொழியை நேசித்து, சிறுகதைகள் மூலம் தமிழகத்து வாசகர்களுக்கும் புலம் பெயர்ந்த கனடாவுக்கும் இலக்கியப் பாலம் போட, குரு அரவிந்தன் எடுத்துக் கொண்ட முயற்சி என்னைச் சந்தோஷப்பட வைக்கிறது' என்று எழுத்தாளர் அனுராதா ரமணன் அவர்கள் வாழ்த்தியதையும் நினைத்துப் பார்த்தேன்.



இந்த விழாவில் ஊடகவியலாளர்களான: உதயன் ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், தமிழர் தகவல் ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம், தாய்வீடு ஆசிரியர் டிலிப்குமார், விளம்பரம் ஆசிரியர் ராஜா மகேந்திரன், காலம் இதழ் ஆசிரியர் காலம் செல்வம், பதிவுகள் மின்னிதழ் ஆசிரியர் கிரிதரன் ஆகியோரையும் சந்திக்க முடிந்தது. இவர்கள் எல்லாம் எனது எழுத்துக்குத் தளம் அமைத்துக் கொடுத்துப் பல வாசகர்களை உருவாக்கித் தந்தோர். இதைவிட இன்னுமொரு ஆச்சரியம் காத்திருந்தது, எழுத்தாளர் கடல்புத்திரன் அவர்களின் கதைகளைப் பதிவு மின்னிதழில் வாசித்திருக்கின்றேன், ஆனால் ரொறொன்ரோவில் அவர் இருந்தும் நேரடியாக அவரைச் சந்தித்ததில்லை. இந்த விழாவில் அவரையும் கிரிதரன் எனக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தார். கடல் புத்திரன் என்ற புனைபெயரில் எழுதும் பாலமுரளி தனது சிறுகதைத் தொகுப்பான வேலிகள் என்ற சிறுகதைத் தொகுப்பு நூலையும் தந்திருந்தார். 1998ஆம் ஆண்டு குமரன் பப்பிளிஷரால் வெளியிடப்பட்ட இந்த நூலில் வேலிகள், வெகுண்ட உள்ளங்கள், செல்லாச்சியம்மா, பெண், ஏழை என்ற தலைப்புகளில் குறுநாவல்களும், சிறுகதைகளும் இடம் பெற்றிருக்கின்றன. இதைவிட நண்பர் கிரிதரனிடம் இருந்தும் அமெரிக்கா என்ற நாவலும், கட்டடக் கா(கூ)ட்டு முயல்கள் என்ற சிறுகதைத் தொகுப்பும் அன்பளிப்பாக எனக்குக் கிடைத்தன.

கோவிட் காரணமாக இதுவரை ஒதுங்கியிருந்த பல எழுத்தாளர்களையும், இலக்கிய நண்பர்களையும் இந்த விழாவில் சந்திக்க முடிந்தது. தமிழகத்தில் இருந்து விருது பெறுவதற்காகப் பாவண்ணன் மற்றும் சாம்ராஜ் ஆகியோரும் வந்திருந்தார்கள். அவர்களையும் சந்தித்து இலக்கியம் சார்ந்த உரையாடல்களை மேற்கொள்ள முடிந்தது. இவர்களை விட வேல்முருகன் இளங்கோ மற்றும் சுகிர்தராணி ஆகியோருக்கும் விருதுகள் கிடைத்தாலும் அவர்களால் நேரடியாக வந்து கலந்து கொள்ள முடியவில்லை. விருது பெற்றவர்களைக் கனடாவில் பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையினர் தமிழில் அறிமுகம் செய்து வைத்தனர். தங்களால் முடிந்தளவு தமிழ் உச்சரிப்பை சரியாகச் செய்தார்கள். தினமும் வீட்டிலே தமிழ் மொழியைக் கதைத்துக் கொண்டு வந்தால், தமிழ் மொழிபோல இலகுவான மொழி ஒன்றுமில்லை என்பதை இவர்களும் புரிந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக Thomas Hitoshi Pruiksma அவர்களும், சிறப்பு விருந்தினராக Kim Echlin அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இவர்களில் தோமஸ் புறுஸ்க்மா நன்றாகத் தமிழில் உரையாடினார். இரவு விருந்துபசாரத்துடன் நிகழ்வு சிறப்பாக நிறைவுற்றது. உலகெங்குமுள்ள எழுத்தாளர்கள் புலம் பெயர்ந்த கனடா நாட்டில் கௌரவிக்கப்படுவது எமக்கும் பெருமையே. இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களுக்கும், விருது பெற்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.



## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.616.7840**

**14TH AVE. & 9TH LINE**
BY PASS (near walmart)
3 Bedroom brand new bsmt for rent. Sep. entrance & parking.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.400.3462**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry.
Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**KENNEDY & LAWRENCE**
1 bedroom bsmt with sep. kitchen & washroom. Preferred no smoking working person. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.727.8681**

**NEILSON & FINCH**
2 Bedrooms for rent. Sep.entrance & Sep.laundry. Close to TTC & Eraa Supermarket. Avail. July 01, 2023.
**647.868.5871/416.292.5871**

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Avail. immediately .
Couple preferred.
தொடர்புகளுக்கு: **416.258.3256**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to all the facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 bedrooms bsmt for rent. Sep.entrance. Close to Eraa Supermarket. Single, couple preferred. Avail. immediately .
**647.656.1131/416.291.4340**

**MORNINGSIDE & STAINES**
2 bedrooms bsmt for rent. Sep.entrance, parking & laundry.
Avail. immediately .
தொடர்புகளுக்கு: **647.608.1134**

**BRIMLEY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep.entrance, parking & laundry. Close to all facilities.
Avail. immediately.
**416.843.0011 / 647.293.8109**

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

## BASEMENT FOR RENT

**SCAR. GOLFCLUB & BRIMORTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry, parking. Close to school, Centannial college & TTC. No smoking & no pets.
Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.622.0350**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Large living hall with dining. Sep. entrance. Close to TTC, walmart, Srilankan Groceries & Schools.
தொடர்புகளுக்கு: **416.857.4619**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & sep. laundry. Close to Amazon, Canada Post, banks, TTC & all other facilities.
Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.566.2601**

## BASEMENT FOR RENT

**KENNEDY & 14TH AVENUE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, full wash room & laundry. Close to all facilities. Avail. immediately.
**Call Sam: 647.891.4484**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent.
Sep. entrance, laundry & parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.3186**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom for rent in a bsmt. Couple / ladies preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**WARDEN & ELLESMERE**
1 bedroom for rent in a house.Close to all the facilities. Avail. immediately.
**437.233.4848 / 416.274.5306**

**BELLAMY & EGLINTON**
One room for rent in an apartment. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.833.4878**

**WARDEN & FINCH**
One room for rent in a 3 bedroom apartment. Male preferred.
Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.704.4444**

**NEILSON & MCLEVIN**
1 Room for rent in a basement. Laundry. Close to all facilties.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.766.7779**

**WARDEN & FINCH**
1 Master bedroom with washroom for rent in a Condo.
Avail. immediately.
**647.666.4691 / 416.219.9764**

**MIDLAND & ELLESMERE**
1 bedroom for rent in main floor. Couple preferred. Close to school, retail, Tim Hortons, TTC & RT.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.403.3127**

**MARKHAM & ELLESMERE**
Room for rent with food.
Couple / Seniors preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:: **647.667.0482**

**BRIMLEY & EGLINTON**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Working female or students preferred.
Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

## ROOM FOR RENT

**MARKHAM & STEELES**
1 bedroom for rent in a upstair house .Cable, internet, utilities & laundry. Single working lady preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
4 bedroom house for rent. 2.5 washrooms & 2 parking.
Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.739.8865**

**MARKHAM & ELSON**
3 bedroom semi detached townhouse for rent. Parking & laundry. Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.893.6491**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities.
Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு:**647.680.3167**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
1 bedroom bsmt for rent. Laundry & parking. Small family or female students or seniors preferred.
No pets & no smoke.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.729.4939**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent . Sep. entrance & laundry.
Close to all facilities. No pets, no smoking & no alcohol.
Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.660.4874**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent.
Sep. entrance, laundry & parking. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.567.1764**

மேலும் பக்கங்கள் 13,14,15

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**

2 bedroom bsmt for rent . Sep. entrance, parking & laundry. Couple, Students or small family preferred. No smoke, no pets. Close to all facilities. Avail. July 01, 2023.

**647.569.0376/647.228.6841**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & DENISON**

Full legal 1 bedroom + den bsmt for rent. Kitchen, living & dinning. Fire safety & walk up Sep. entrance, sep. laundry & parking. Rent $1900 per month. Close to all facilities.

தொடர்புகளுக்கு: **647.802.7021**

## ROOM FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

Room available for rent in a house. Close to all the facilities. Students/ working professionals preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.731.3314**

## ROOM FOR RENT

**SALEM & ROSSLAND**

Room for rent in a house. Parking available. Ladies preferred. One person - $850 all included. Close to Amazon and other facilities. Avail. immediately.

**438.879.6064 / 514.965.6064**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

1 large bedroom for rent in a Condo. Sep.washroom & parking. 2 people can share the room. Male preferred. Close to all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.688.6642**

## ALTRA PAINTING

**Altra Painting and General Repair.**

Free estimate. தொடர்புகளுக்கு:

**416.315.9348**

senthi0115@gmail.com

## HOUSE FOR RENT

**STEELES & WHITES ROAD**

4 Bedroom 2 story detached house for rent. Close to park, public transportation & all the facilities. 10 mins. drive to Markham & Steeles. Avail. immediately.

**416.786.5816 / 647.891.5290**

## HOUSE FOR RENT

**MORRISH & ELLESMERE**

3 bedroom house for rent. 1 wash room, kitchen, living room, double garage & parking. Close to library, schools & TTC. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.994.7849**

## HOUSE / ROOM FOR RENT

**RITSON & TAUNTON RD.**

3 Bedroom (main floor) house for rent. **Also** 1 bedroom available for rent in 2nd floor. Close to all the facilities. Avail. July 2023.

தொடர்புகளுக்கு: **647.764.3697**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

3 bedroom town house with walk-out bsmt for rent. Laundry, 2 parking. Close to hwy 401, School, Walmart & Rouge Bakery. Avail. Sep. 01, 2023.

தொடர்புகளுக்கு: **437.215.5739**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

STAINES & MORNINGSIDE

2 Bedroom walkout basement for rent.

3 Bedrooms house for rent.

Contact: **647.686.8590**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820/647.868.2440**

## ROOM FOR RENT

**THICKSON & DRYDEN ( WHITBY)**

Fully furnished room for rent. Female ONLY. Students are welcome. Sharing the whole upper floor with only one other working lady. Very clean and quite, water, electricity, gas, internet, laundry & parking included. Walking distance to public transport, nofrills & schools. "MUST SEE"

Avail. immediately. **Email: n_rajah@sbcglobal.net**

தொடர்புகளுக்கு: **437.971.9000**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

**We are working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.**

உங்களது **rooms, house or basement**இனை சட்டரீதியாக **University / College Students** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee – 416.272.6811 / Hari – 647.262.8490**

**HomeLife Future Realty Inc. Brokerage**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**

2 bedroom + den bsmt for rent. Sep.entrance, Parking & laundry. Close to Amazon, Canada Post, TTC, YRT, Major Banks, Srilankan grocery stores & all other facilities. No pets, no smoking & no alcohol. Working female or students preferred. Avail. June15, 2023.

**Please Contact 647.284.2735**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen. தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## ROOM / HOUSE FOR RENT

**MARKHAM & DENISON**

1 large bedroom with sep. washroom for rent. 2 or 3 people can share - male preferred. $1400 per month including utilities. No kitchen available. **Also** another room for rent.Rent $900. No alcohol, no smoking & no pets. Close to all the facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.507.2148 / 647.864.1051**

## HOUSE / BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**

4 bedrooms house for rent. **Avail. July 01, 2023.**

Also 2 bedroom bsmt for rent. Sep. entrance, sep.laundry & parking. Close to all facilities. **Avail. immediately.**

**WESTNEY & TAUNTON**

4 bedrooms detached house for rent **. Avail. immediately.**

தொடர்புகளுக்கு: **416.836.0010**

## JOB AVAILABLE

Full time & part time jobs available at a busy Canadian Restaurant in Durham Region. Looking for **Front House Manager & Cook.** Immediate positions available.

தகுந்த சம்பளம் மற்றும் சலுகைகள் உண்டு.

Please call KRIS: **647.802.7021**

Email: **restaurantjobhiring@gmail.com**

## LAND FOR SALE IN JAFFNA

திருநெல்வேலி - கோண்டாவில் எல்லையில் உள்ள **3.9** பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கிணற்று பங்கு வசதி உள்ளது. திருநெல்வேலி சந்தை மற்றும் யாழ். பல்கலைக் கழகம் மிகவும் அண்மையில் உள்ளது.

தொடர்புகளுக்கு அழையுங்கள் **416.357.1252**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## ஜோதிடம்

உங்களின் பிறந்த நேர அடிப்படையில் உங்களிற்கான இறந்த கால, நிகழ்கால, எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளலாம். ஜாதக்குறிப்பு எழுதுதல், திருமணப்பொருத்தம் பார்த்தல் (பொருத்தம் சரியாக அமையாதுவிடில் அதற்கான கட்டணம் செலுத்தத் தேவையில்லை), முகூர்த்த நேரங்கள் கணித்தல், பிரசன்ன ஜோதிடம், நினைத்த காரியங்கள் சரியாக அமைவதற்கான கேள்வி பதில்கள்...

சத்தியா - **416.209.4115**

(பாரம்பரிய ஜோதிடத்தை திருக்கணித முறைப்படி கற்றவர்)

## LAND FOR SALE IN WATTALA

இலங்கையில் கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் செல்லும் வழியில் உள்ள வத்தளைச் சந்திக்கு அருகாமையில் உள்ள 45 பேர்ச்சஸ் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. காணியை முழுதாகவோ அன்றி பகுதியாகவோ வாங்கலாம். விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு அழையுங்கள் **416.839.7064**

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement

**647-861-8240**

## STORE FOR LEASE

**MIDLAND & MCNICOLL**
**2190 McNicoll Ave.**

We have a store (space) for sub - lease. Good for Taxation & Insurance purposes. Convenient location.

Please Contact **416.731.3469**

## MANAGER, COOK & WAITRESS WANTED

VICTORIAPARK & HWY 401 (Scarborough) இல் அமைந்துள்ள ENGLISH PUBக்கு Experienced MANAGER, LINE COOK & WAITRESS wanted immediately. FULL TIME / PART TIME.

**Please Contact at 416.566.9994**

## RABBITS FOR SALE

**Rabbits for sale in Scarborough.**

வீட்டில் வளர்க்கும் முயல் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**647.766.7779**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான (Graduated in Medical office administration) பெண் ஒருவருக்கு மணமாகாத 38 - 40 வயதுள்ள மணமகனைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு:
**416.551.9737 / 647.937.1243**

## JOB JOB JOB

Line cook (full time), Dishwasher (part time) needed for a busy restaurant - OakSide Bar & Lounge, in Markham / Stouffville. Immediate positions available. Line cook ,Dish washer போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம். **Good Pay & Benefits available**

தொடர்புகளுக்கு: **647.406.2405**

## BOOK KEEPING JOB AVAILABLE

**LOOKING FOR AN OFFICE HELPER.**

Knowledge and Experience of Quick Books & Accounting is an asset.

Part time or Full time job available.

Please Contact. **647.802.7021**

## HOUSE KEEPING JOB AVAILABLE

**9th LINE & 14th AVENUE**இல் அமைந்துள்ள வீடு ஒன்றில் பகுதி நேரம் வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை.

Looking for a **HOUSE KEEPER to do Laundry, cooking & cleaning. Will pay $1000 Cash per month for part time.** Permanent Job. Full time also available.

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். **647.802.7021**

## JOBS AVAILABLE

**Established name brand hotel North of Barrie looking for Front Desk and Night Audit employees.**

**If interested, please send your resume to Rajiv.Mahendran@Hilton.com**

## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management

All Classes available in Scarborough & Stouffville


Mr.S.F.Xavier (Teacher)

Contact: 647.340.9490 / 416.732.2228

## யோக சோதிடம்



கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


# வட்டி...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

கொடுக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எனினும் இதற்குத் தகுந்த வழிமுறைகளை கண்டு கொள்ளாவிட்டால் இளம் கனடியர்களுக்கு ஆதனம் வாங்கும் நடைமுறை இலகுவாக இருக்க முடியாது.

சந்தையின் புள்ளிவிவரம்
(Market Statistics)

மே 2023 - சராசரி வீட்டு விலை $1,196,101
மே 2023 - மொத்தமாக விற்கப்பட்ட ஆதனங்கள் 9,012

இதற்கு முந்திய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ஆதனவிலையில் 1.2% இறக்கம் ஏற்பட்டபோதும் விற்கப்பட்ட ஆதனங்கள் 24.7%இனால் அதிகரித்துள்ளது.

இதற்கு முக்கிய காரணம் சந்தைப்படுத்த, ஆதனங்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது.

யூன் 07, 2023 இல் ஏற்படுத்தப்பட்ட வட்டி வீத அதிகரிப்பு ஆதன வியாபாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கலாம்.

2022இன் ஆரம்ப வட்டிவீதம், எமது வாழ்வில் மீண்டும் திரும்பி வருமா என்பது மிகப்பெரிய வினா?

| Date | Target (%) | Change (%) |
|---|---|---|
| June 07, 2023 | 4.75 | +0.25 |
| April 12, 2023 | 4.50 | – |
| March 08, 2023 | 4.50 | – |
| January 25, 2023 | 4.50 | +0.25 |
| December 07, 2022 | 4.25 | +0.50 |
| October 26, 2022 | 3.75 | +0.50 |
| September 07, 2022 | 3.25 | +0.75 |
| July 13, 2022 | 2.50 | +1.00 |
| July 01, 2022 | 1.50 | +0.50 |
| April 13, 2022 | 1.00 | +0.50 |
| March 02, 2022 | 0.50 | +0.25 |
| January 26, 2022 | 0.25 | – |

# STACK TOWN HOUSE FOR SALE

HOT PROPERTY

5% Down Only

$669 000



- 3 Bedroom
- 2 Full Washrooms
- Practical Layout
- Beautiful Modern Kitchen
- Laminated floor
- Fridge, stove, Washer, Dryer & B/I Microwave.
- Close to all Amenities
- Ellesmere & Birchmount

for further details :



TISI PARA
Real Estate Agent
(647) 296-0596

HOMELIFE

HomeLife/GTA Realty Inc., Brokerage
O : 416-321-6969 F: 416-321-6963


## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

# அழகான வரிகள்....

- செல்வி -

வாழ்க்கை என்பது நீ சாகும்வரை அல்ல... மற்றவர்களின் மனதில் நீ வாழும் வரை..

நாம் தேவையில்லை என்று சிலர் நம்மை நினைக்கத் தொடங்கும் முன் விலகி நிற்கக் கற்றுகொள்வது சிறந்தது.

ஆசைப்படுவதை மறந்து விடு. ஆனால் ஆசைப்பட்டதை மறந்து விடாதே!

மன நிறைவு என்பது இயற்கையாக நம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் என்பது நாம் தேடிக் கொள்ளும் வறுமை. சில நேரங்களில் தனிமை கடினம். சில நேரங்களில் தனிமை தான் இனிமையான தருணம்.

மரணத்தைப் பற்றிக் கவலைப் படாதே. நீ இருக்கும்வரை அது வரப்போவதில்லை. அது வரும்போது நீ இருக்கபோவதில்லை. புரியாததைப் புரிந்து கொள்ளுங்கள். புரிந்ததைப் பகிர்ந்து கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

வாழ்க்கை உன்னை எதிர்பாராத இடங்களுக்குக் கூட்டிக்கொண்டு செல்லும். அன்புதான் உன்னை வீட்டுக்கு அழைத்து வரும்!
அறிவுரை தேவைப்படும் போதுதான் ஆணவம் கண்ணை மறைக்கும்.
நீ சிரித்துப் பார்.. உன் முகம் உனக்கு பிடிக்கும்!

மற்றவர்களை சிரிக்க வைத்துப் பார்... உன் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்!
நீ நேசிக்கும் இதயத்தில் பல ஆண்டு காலம் வாழ்வதை விட உன்னை



நேசிக்கும் இதயத்தில் சில நொடிகள் வாழ்ந்து பார் இதயத்தில் சுகம் தெரியும்
வளர்ந்தபின் வளைவது பெருமை. வளைந்தே இருப்பது சிறுமை.
விரும்புவதால் கருவறையில் மீண்டும் ஒருமுறை இடம் கிடைப்பதில்லை
வெறுப்பதால் கல்லறையும் நம்மை விட்டுவிட போவதில்லை இருக்கும்வரை மகிழ்சியாக இருப்போம்.


wpm Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Ajax*** **– Rossland/Audley - Townhouse**
(4Brm + 3Bath) **[$2,900/m]**
***Aurora*** **– Bayview Ave/Vandorf Side Rd - Detached**
(4+1Brm + 4Bath) **[$3,900/m]**
***Niagara Falls*** **– Palmer/Cookman - Detached**
(3Brm + 1Bath) **[$2,700/m]**

**Available for Rent**

***Toronto*** **– Bathurst/Lakeshore – Condo**
(1Brm + 1Bath) **[$2,295/m]**
***Toronto*** **– Wilson Ave/Allen Rd – Condo**
(2Brm + 1Bath) **[$2,600/m]**
***Whitechurch - Stoufville*** **– Hoover Park/Ninth Line – Detached**
(4+1Brm + 4Bath) **[$3,700/m]**

BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# பாரதி...

09ஆம் பக்கத்தொடர்ச்சி


மாணவன் தேர்வுக்குத் தயாராகிப் போற மாதிரி வருவாரு. அவர மாதிரியான ஆட்களை இனி வரும் தலைமுறைகள்ல பார்ப்பது எல்லாம் அபூர்வம்.

ஆர்.வி. உதயகுமாருக்கு ஒரு சிறிய பாத்திரம்தான். அண்ணன் என்னுடன் படிச்சவரு. என்னடா என்ன விட்டுட்டியே என கேட்டுட்டே இருப்பாரு. அதனால அவரையும் கூப்பிட்டேன்.

**ஓர் இயக்குநராக இந்த நான்கு இயக்குநர்களை இயக்கிய அனுபவம் எப்படி இருந்தது?**

இயக்குநர்கள்தான் சிறந்த நடிகர்கள். எப்படி நடிக்கணும்னு அவங்களுக்கு சொல்லிக் கொடுக்க அவசியமே இல்ல. மேலும், நான் திரைக்கதையிலயே ஒரு நடிகர் எப்படி பார்க்கணும், எப்படி உட்காரணும், எப்படி காலை அசைக் கணும்னு எல்லாத்தையும் எழுதிருவேன். காற்றின் திசை முதற்கொண்டு நான் எழுதியிருப்பேன். அதனால அவங்க அதை புரிஞ்சிகிட்டு சரியா செஞ்சிருவாங்க.

உலகளவில் நிறைய இயக்குநர்கள் ரொம்ப முன்னாலயே நடிக்க தொடங்கிட்டாங்க. 'சினிமா பாரடைசோ' இயக்குநர் ஜியுசெப்பி டோர்னேடோரின் ஒரு படத்துல பிரபல இயக்குநர் ரோமன் போலன்ஸ்கிதான் கதாநாயகன். ரஜினி காந்த் மாதிரி பிரான்ஸ் சினிமால



முன்னணியில இருக்கும் நடிகரும் அதுல நடிச்சிருக்கார். பாக்யராஜ் கதை தனி. அவரை விட்டுட்டு பார்த்தா, தமிழ்ல இது மாதிரி இயக்குநர்கள நடிக்க வச்சது முதல்ல 'சொல்ல மறந்த கதை'தான். அதுக்கு பிறகுதான் எல்லோருமே நடிக்க ஆரம்பிச்சாங்க. மிஷ்கின் எல்லாம் நான் நடிக்கச் சொன்னேன். 'பள்ளிக்கூடம்' படம் தொடங்க நாலு நாளு இருக்கும்போது ஆளு ஓடிப் போயிட்டான். தேடுனோம், எங்க போயி மறைச்சிட்டான்னு தெரியல. 'பள்ளிக்கூடம்' படத்துல கௌதமையும் நடிக்க கூப்பிட்டேன்.

**உங்கள் இயக்கத்தில் அவர்களது தலையீடு இருந்ததா?**

சொன்னதே இல்ல. பாரதிராஜா அண்ணன் எவ்வளவு பெரிய இயக்குநரு. ஒரு இடத்துலகூட சொன்னது இல்ல. கௌதம், டயலாக் திரும்ப வர்றது மாறி இருக்கே அப்படின்னார். வழக்கமா நாம பேசும் போது எத்தனை முறை சொன்னதையே திரும்ப சொல்றோம். அதுதான் அப்படின்னு நான் விளக்கி சொன்னதும் புரிஞ்சிகிட்டாரு. வாழ்க்கையில அப்படி இல்லயே. ஒருவன் வழவழன்னு பேசிகிட்டே இருப்பான். ஒருவன் பேசாமலே இருப்பான். சினிமால மட்டும் எல்லோரும் அளவா பேசுறாங்க. அவர சிறந்த இயக்குநர்ங்குறான். எல்லோரும் குறைவா வசனம் பேசுறது போலியான படம்.

**'கருமேகங்கள் கலைகின்றன' படத்தின் கதையை 2003இலேயே எழுதிவிட்டதாக சொன்னீங்க. 2006இல் திரைக்கதை எழுதிட்டீங்க. ஆனாலும் படமாக ஏன் இவ்வளவு காலமானது?**

2003இல் ஒரு சிறுகதையாத்தான் இத எழுதினேன், சினிமாவுக்குன்னு எழுதலை. அத படிச்சிட்டு ஒருத்தர், இந்த ரெண்டு பாத்திரங்களும் முக்கியமானதாச்சே. இத நீங்க படமாக்கலாமேன்னு சொன்னார். ஆனாலும், அதுக்கான காலம் இது இல்ல. நிச்சயம் ஒரு காலம் வரும் அப்ப எடுப்போம்னு எடுத்து வச்சேன். அந்தக் காலம் இப்ப வந்துவிட்டது.

**அதிதி பாலன் இந்த படத்துக்குள் எப்படி வந்தார். அவரை இயக்கிய அனுபவத்தில் அவர் நடிப்பு பற்றி உங்கள் கருத்து என்ன?**

அவர் நடிச்ச 'அருவி' படம் நான் பார்த்தேன். வியந்து போய்ட்டேன். அந்த வயசுல அந்த பாத்திரத்த வேற யாரும் எடுத்து செய்வாங்களான்னு தெரியலை. அப்புறம் அத மறந்துட்டேன். இந்த படம் தொடங்கும்போது இதுக்குன்னு நடிகையை இந்தியா முழுதும் போய் தேடினேன். சிலரை தேர்வு செய்தேன். ஆனால், அவங்க கொடுத்த தேதி சரியா வரல. ஆனால், அது நல்லதுக்குத்தான். அவங்க எல்லாம் நடிச்சிருந்தா இந்த அளவு திருப்தியா வந்திருக்காது. அதிதி இதுல கதைய தாண்டி நிற்கிற ஒரு பாத்திரம். படப்பிடிப்பு தளத்துல எல்லோரும் அழுதுட் டாங்க. ஒரு துளி கூட பிசிறு இல்லாம அவ்வளவு நேர்த்தியா செஞ்சிருக்கார். அவர் நடிப்புல அடிப்படையான திருத்தங்கள் எதுவும் நான் சொல்லலை.

அதிதி, வர்ற எல்லா படங்கள்லயும் ஒப்புக்கிறதில்ல, ரொம்ப தேர்ந்தெடுத்துதான் நடிக்கிறாங்க. சிறந்த பெண்ணாவும் இருக்காங்க, சிறந்த நடிகையாவும் இருக்காங்க. அவங்களுக்கு பெரிய எதிர்காலம் இருக்கு.

**படப்பிடிப்பு தளத்தில அதிதி நடிக்கிற காட்சியில எல்லோரும் அழுதுட்டாங்கன்னு சொன்னீங்க. ஜிவி பிரகாஷ் இந்த படத்தப் பார்த்துட்டு அழுதுட்டேன்னு சொல்லியிருக்கார்.**

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)



# ஒப்பீட்டுச் சிந்தனை மனித வாழ்வை உயர்த்துமா ? - நாடும் நடப்பும்- 58




இருவருக்கிடையிலுள்ள ஒப்புமையையும், வேற்றுமையையும் பார்ப்பது மனித இயல்பு. அன்றாட வாழ்க்கையில் ஒப்பீடு என்பது ஒருங்கிணைப்புக் கொள்கையின்படி குணங்களை அடையாளம் காண்பதாகும். ஒப்பீடு என்பது பெரும்பாலும் விடயங்களின் ஒற்றுமையையும், பன்முகத் தன்மையையும் அடையாளம் காணும் ஒரு வழியாக வரையறுக்கப்படுகிறது. தத்துவத்தில் ஒப்பீடு என்பது ஓர் அறிவாற்றல் செயல்பாடாகும். இதன்மூலம் செயல்முறைகள் மற்றும் நிகழ்வுகளின் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒப்பீடு ஒரு காலாவதியான அர்த்தமல்ல. மாறாக இது தொடர்ந்து தீவிரமாகப் பயன்படுத்தப்படுகிறது. சிந்தனை என்பது சிந்தித்தல் அல்லது சிந்தை மூளையில் முதன்மையாக இடம்பெறும் ஓர் அடிப்படைச் செயற்பாடு. இதை அறிதிறன் வழிமுறை எனவும் கூறுவர். சிந்தனை ஒரு அகச் செயற்பாடாகும். ஒப்பீட்டுச் சிந்தனை மனித வாழ்வை உயர்த்துமா என்பது ஒரு கேள்விக்குறியே ஆகும். இங்கு எம் வாழ்வில் ஒப்பீட்டுச் சிந்தனை மேலோங்கியே காணப்படுகின்றது.

ஒப்பீடு: பதவி, பணம், தொழில், படிப்பு, வசதி, வாய்ப்புக்கள் எனப் பல விடயங்களில் தொடர்கின்றன. பொதுவாக ஆண், பெண் என்ற பேதமின்றி இருபாலரிடமும் காணப்படுகின்றது. ஒப்பீட்டுப் பார்த்தால் ஆணைவிடப் பெண்களிடம் இது அதிகம். ஒப்பீட்டுப் பார்த்தல் சில சமயங்களில் மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு, விருத்திக்கு, சூழலுக்கு, ஆரோக்கியத்துக்குத் தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது. ஒப்புநோக்குச் சிந்தனை மக்களின் வளர்ச்சிக்கு ஊக்கியாக அமைகின்றது. அதாவது மக்களின் ஏற்றத்துக்கு ஏணிப்படிகளாக அமைகின்றது. ஒப்பீடு மீள்பார்வைக்கு வழிவகுக்கும். இதன்மூலம் நம்மை நாம் மதிப்பீடு செய்ய உதவும். மதிப்பீட்டின் மூலம் முன்னேற்றப் பாதையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றிச் சிந்திக்க முடியும். ஒருவனது பலம், பலவீனத்தை அறிந்துகொள்ள இது ஒரு கருவியாகும். ஒப்பீட்டின்மூலம் இருவருக்கிடையிலான சமமின்மையை சரி செய்துகொள்ள முடியும். தீயவர்களும் தம்மை ஒப்பிட்டுப் பார்த்து மனமாற்றம் பெற்று சீரிய வழியில் நடப்பதற்குத் தூண்டுகோலாக அமையும். ஒப்பீட்டுச் சிந்தனை மீளாய்வு இழப்பீட்டுச் சிந்தனைத்திறன் தோன்றவும் வழிகோலும். மேலும் பண்புகளை சரியாகவும், நிறைவாகவும் புரிந்துகொள்ளவும் உதவும். ஒவ்வொருவரினதும் சிறப்புக்களைத் தனித் தனியே அறிவதற்கு ஒப்பீடு என்பது ஒரு வழிமுறை அல்லது உத்தியாகும். போட்டி, பொறாமையற்றதாக ஒப்பீடு இருக்க வேண்டும். இருப்பின் அது தனிமனித, சமூக முன்னேற்றத்துக்கு மிகவும் சிறந்ததாக அமையும். இல்லையேல் அது எம்மை பாதாளத்தில் தள்ளிவிடும்.

ஒப்பீட்டுச் சிந்தனையை மனிதகுல வளர்ச்சிக்குப் பிரயோகிக்கலாமே தவிர மானிட அழிவுக்கு வித்திடலாகாது. மாணவர்களுக்கிடையில் ஒப்பீடு செய்வதென்பது இங்கு அதிகம். எந்தப் பரீட்சையாக இருந்தாலும் சித்தியடைந்தவர்களுடன், சித்தியடையாதவர்களை பெற்றோர்கள் திட்டித் தீர்ப்பர். குழந்தைகள் வைரங்கள் அதனை திட்டித்தீர்க்காதீர்கள். அவர்களைத் தீட்டுங்கள். அடுத்த வீட்டுக் குழந்தையுடன் உங்கள் குழந்தையை ஒப்பிட்டுப் பேசுவதால் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை தன்னை அறியாமல் வளரும். ஒப்பீடு என்பது



படிப்பில் மட்டுமல்ல பதவி, சொத்து, வசதி, ஆடம்பரம், வருமானம், வசதி என எல்லாவற்றிலும் ஒப்பீடு தலை தூக்கத்தான் செய்கின்றது. போலிக் கௌரவங்களுக்காக ஒப்பீட்டில் ஈடுபடுவது நல்லதல்ல. ஒப்பீடு என்கிற நச்சுப் பொருளால் வாழ்க்கை வீணடிக்கப்படுகிறது. ஒப்பீடுகளும் அளவோடிருந்தால் ஆரோக்கியம், அளவுக்கு மீறினால் ஒரு கட்டத்தில் எம்மையே அழித்துவிடும். ஒப்பீட்டுத் தன்மையால் உறவுச் சிதறல்களும் ஏற்படும். சொந்த வீட்டுக்கு சொந்தங்கள் வந்துபோக வேண்டும். சொந்த வீடு என்பது சொந்தப் பணத்தில் கட்டிய வீடு என்பதல்ல கருத்து. சொந்தங்கள் வந்து போகும் வீடே சொந்த வீடாகும். ஒப்பீட்டுச் சிந்தனையால் நம் மாண்பை நாம் கைவிடக்கூடாது. மற்றவரது நிலைக்கு நம் நிலையை தக்கவைக்க போட்டிபோட வேண்டும் என நினைத்து நம் பாதையில் யாரும் குறுக்கிடும்போது அவர்களை வீழ்த்திச் செல்வதில் மனதை விடாது நம் மாண்பை நாம் கைவிடாது செயலைத் தொடரவேண்டும். போட்டியை சந்திப்பதை விட சவால்களை சந்திப்பதுதான் நல்லது. ஜெயிக்க வேணும் என நினைத்து ஓடுபவன் ஜெயிக்கிறான். அவனை வெல்ல வேணும், தோற்கடிக்க வேணும் என்ற போட்டியில் ஓடினால் தோற்க வேண்டி வரும். அடுத்தவர்போல் பேச வெளிக்கிட்ட சிலர் பொய் பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அடுத்தவர்போல் நடக்க வெளிக்கிட்ட சிலர் நடித்து வாழ்கின்றனர்.

ஒரு பிள்ளை வைத்திருக்கும் விளையாட்டுப் பொருளைத் தானும் வைத்திருக்க வேண்டும் என இன்னொரு பிள்ளை அழும் அல்லது அடம்பிடிக்கும். அவ் ஒப்பீட்டுத் தன்மைக்கு தந்தை சாதகமாகச் செல்லக்கூடாது. பிள்ளை எதைக் கேட்டாலும் வாங்கிக் கொடுக்கும் தந்தையா? பிள்ளை கேட்காமலே வாங்கிக் கொடுக்கும் தந்தையா? யார் சிறந்த தந்தை? இருவரும் இல்லை. தன் குழந்தைக்கு எது தேவையோ அதை வாங்கிக் கொடுக்கும் தந்தையே சிறந்தவர். இது நடைபெற்றால் இச்சந்தர்ப்பத்தில் பிள்ளை தன்னை ஒப்பீடு செய்ய முனையமாட்டாது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து வளர்வது கெட்டித்தனம் இல்லை. கெட்டித்தனம் என்பது மனிதர்களை உற்றுப் பார்க்கும் மிகுந்த நிதானமே ஆகும். மற்றவரது குணாதிசயங்களை கிரகித்துப் புரிந்துகொள்வதாகும். இந்தப் புரிதல்தான் வெற்றிக்கு வழிகோலும். உன் நிலையில் நீ உறுதியாக இரு.

ஒப்பீட்டால் மற்றவர்மீது பொறாமை கொள்ளக்கூடாது. “பொறாமை மனிதர்களின் சாபக்கேடு” என்றார் சுவாமி விவேகானந்தர். என்னைவிட அவன் உயர்ந்து விட்டான், நான் தாழ்ந்து விட்டேன் என்று சிந்திக்காதே. செயற்படாமல் யோசிப்பதும், செயற்பட்டபின் யோசித்துக் கொண்டிருப்பதும் பிரச்சனைக்கு காரணம். யாரையும் பழிக்காமல், யாரையும் சபிக்காமல் வாழவேண்டும். உங்கள் விதிக்கு நீங்கள்தான் காரணம். ஒப்பீடு இன்றி நீ யாரென்று நீ மட்டும்தான் முடிவெடுக்க வேண்டும். அடுத்தவன் முடிவெடுக்க இடம் அளிக்கக்கூடாது. நீங்கள் பிள்ளைக்கு ஒப்பீட்டுச் சிந்தனையை பழக்கிவிட்டதால் பிள்ளை ஒப்பிட்டால் அழுதால் அழ விடுங்கள். உணர்வை வெளிப்படுத்த விடுங்கள். அடக்காதீர்கள். அடக்குவது செயற்கை. நீங்கள்தான் பிள்ளையை ஒப்பிடுகிறீர்களே தவிர உங்கள் பிள்ளை உங்களை வேறொரு பெற்றோருடன் ஒப்பிடுகின்றதா? உங்கள் அனுபவத்தை வைத்துப் பிள்ளைக்கு திணிக்காதீர்கள். உங்கள் கசப்பான விடயங்களைப் பிள்ளைக்குக் கூறாதீர்கள். சில பெற்றோர் பிள்ளையை ஒப்பு நோக்கியபின் நீ சரிவரமாட்டாய் எனப் பிள்ளைக்குக் கூறுவர். அதைத் தவிர்த்து வீட்டில் நம்பிக்கையான வார்த்தைகள் வர வேண்டும். அதுதான் பிள்ளையை மேலே கொண்டுசெல்லும். பாராட்டப் பழகுங்கள். பாராட்டத் தயங்கும் சமூகம் ஜெயிக்காது. ஒப்பீட்டால் வரும் அவமானங்களைப் பெரிதாக எடுக்காதே. அவமானங்களை விழுங்கும் சக்தியை வரவழைத்துக் கொள்ள வேண்டும். நமக்குள் நாம்தான் பயணம் செய்ய வேண்டும். ஒப்பீட்டை அளவோடு வைத்து வாழ்ந்தால் வாழ்வு செழிக்கும்.

---

# பாரதி...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர் படம் பார்த்தார். இரவு நாங்க ரெண்டு பேரும் தனியா உட்கார்ந்து பார்த்தோம். அழுதுட்டார். இசை இல்லாமலே இந்த படம் இவ்வளவு செய்யுதே நான் அதுக்கு நியாயம் செய்ற மாதிரி சிறப்பா செய்து தாறேன்னு சொல்லியிருக்கார். இன்னும் ரெண்டு ரீலுக்கு இசை அவர்ட்ட இருந்து வரணும். திரும்பத் திரும்ப திருத்தம் பண்ணிகிட்டே இருக்கார். அந்தளவு ஈடுபாடாய்ட்டார்.



**‘அழகி’, ‘சொல்ல மறந்த கதை’, ‘சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி’ போன்ற உங்கள் ஆரம்ப கால படங்களுக்கு இளையராஜா இசையமைத்தார். அதன் பிறகு வித்யாசாகர், பரதவாஜ் என்று மாறி விட்டீர்கள். இந்தப் படத்துக்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்திருக்கிறார். ‘கரு மேகங்கள் கலைகின்றன’ பட விழாவில் வைரமுத்து பேசும்போது இளையராஜாவுக்கு வாய்ப்பு கொடுங்கள் என்றார். ஆனால், நீங்கள் தள்ளி வந்துவிட்டீர்கள். என்ன காரணம்?**

நான் வேண்டாம்னு சொல்லலை. இளையராஜாவ வேண்டாம்னு சொல்ல யாருக்காவது தகுதி இருக்கா? அவருக்கு மேல யார் இருக்க முடியும்? இந்த படத்துக்கூட அவர அணுகினேன். சந்திக்கலை. என்ன காரணம்னு தெரியல. ஆனா, நடக்கும்.

**இளையராஜாவை ‘மிஸ்’ பண்றீங்களா?**

நிச்சயமா. எல்லா சிறந்த இயக்குநர்களுக்கும் இளையராஜா தேவை. குறிப்பா கதைய மையமா வச்சி, இலக்கியத் தரமா செய்ய விரும்புறவங்களுக்கு இளையராஜா எல்லா காலத்துக்கும் தேவையான ஒருத்தர்.

**சமூக வலைதளங்களில் உங்கள் பெயர் தொடர்பா ஒரு சர்ச்சை ஓடிகிட்டு இருக்கு. அமிதாப் பச்சனைப் பார்த்து தங்கர்பச்சான்னு வச்சிகிட்டீங்கன்னு?**

இதுக்கான பதில 40 ஆண்டுகளா நான் சொல்லிகிட்டு இருக்கேன். பச்சன் வேற பச்சான் வேற. பச்சான்கிறது என்னுடைய அப்பா பெயரு. பச்சைவாழி அம்மன்கிறது எங்க குல தெய்வத்தோட பெயரு. என் அத்தை பெயரு பச்சையம்மாள். எங்க பகுதியில இந்த ரெண்டு பேரையும் பொதுவாக அதிகம் பார்க்கலாம். பச்சன்னா மரங்கள். இயற்கையதான கும்பிட்டோம். மாரின்னா மழை, மாரிமுத்துன்னு சொல்றோம். அதுமாதிரி பச்சைவாழி அம்மன். எனக்கு விட்டுல விட்ட பேரு தங்கராசு. தங்கர்னு அழைப்பாங்க. அப்பா பெயர சேர்த்து தங்கர்பச்சான்னு வச்சிகிட்டேன்.

$ 638,000

TRIDEL CONDO

FOR SALE

181 VILLAGE GREEN SQ.
(KENNEDY & HWY401)





- 2 bedrooms + Den
- 1 Parking + 1 Locker
- 2 full baths
- 840 sq. ft.
- Corner unit

PARA TISIKULASINGAM
SALESPERSON
(647) 296-0596

RAJA MAHENDRAN, Broker/Owner
(416) 315-9397

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc., Brokerage*
O : 416-321-6969 F: 416-321-6963
*Each office independently owned and operated.